தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆடி 16 (1-8-'59). சனிக்கிழமை | இதழ் 7

விலைபோகாத கொள்கை, தலைகொய்யாதோ உன்னை?

"நான் என் சொந்தச் சிந்தனையுடன் முடிவு கட்டினேன் - என் கடந்த கால வாழ்க்கையையும் பொறுப்புக்களையும் துறப்பதென்று! நான் விடுதலை வாழ்வை விழைகிறேன் - அது சோவியத் அரசின் குடிமகனயிருப்பவனுக்குக் கிடைக்கவே கிடைக்காது.

இப்போது சோவியத்தை ஆள்கின்ற அந்த ஆட்சியை நான் வெறுக்கின்றேன்.

சோவியத் அரசு தனது குறிக்கோளை அடையக் கடைப்பிடிக்கும் வழிகள் தவருனவை.

பொதுவுடைமை ஒரு கேடு! ஏனென்றல் அது தனி ஒரு மனிதனையும் அவனது கௌரவத்தை விட்டும் தன்மானத்தை விட்டும் விரட்டுகிறது பொதுவுடைமைச் சித்தாந்தம் மனிதனை மனிதத் தரத்திலிருந்து தாழ்த்துகிறது. அவன் கட்சிக்கும், ஆளும் தலைவர்கட்கும் அடிமையாகிக் கிடக்கிருன்.

நான் இரஷ்ய மக்களை நேசிக்கிறேன். ஆனல் அவர்களை ஆளும் அரசையும், அதன் கொடுமை மிகு போலீசையும், துப்பறியும் துறையையும் வெறுக்கிறேன். அவை இரஷ்யரை நசுக்குகின்றன. நான் என் முழு மனதோடுதான் இந்த இரங்கூனிலுள்ள சோவியத் தூதுவராலுவலகத்தை விட்டு வெளியேறுகிறேன். ஏனெனில், கொடுமை மிகுந்ததும் நசுக்குகின்றதுமான இந்தப் பொதுவுடைமைச் சித்தாந்த பயங்கரத்தினை எதிர்த்துப் போராடப் போகிறேன்"

விடுதலை வாழ்வை விரும்புகிருராம்!

சொந்தச் சிந்தனையோடு சொல்கிருராம்!

பொதுவுடைமைக் கொடுமை மனிதனை விலங்காக்குகிறதாம்!

பொல்லாங்கு போக்க உயிரையும் பணயம் வைப்பாராம்!

யார் இவர்? எங்கிருந்தார்? எங்கு போனர்?

இவர் பெயர் அலெக்சாண்டர் உரீவிச் கசனுச்சீவ் என்பது; இரஷ்ய மண்ணில் பிறந்தார்; இரங்கூனிலுள்ள சோவியத் தூதுவராலயத்தில், தகவல் அறிவிப்பு ஊழியம் இவரது பணி என வகுத்திருந்தனர். ஆனல், அப்பதவியிலிருந்து கொண்டே தனது உடன் உழைக்கும் தோழர்களையும் காணவரும் பர்மியப் பொதுவுடைமை வாதிகளையும் வேவு பார்ப்பது வேறு. இவருக்கிடப்பட்டிருந்த கட்டாய நிபந்தனை! மனிதனை, இயந்திரமாக - பாச உணர்வற்ற விலங்காக மாறச் செய்தனர். இரஷ்யாவில் இருந்தவரை குருஷ்சேவின் தாண்டவம் இவருக்குத் தெரியவில்லை. தூதுவராலயப் பதவி பெற்று, பர்மாவிற்கு வந்த பின்தான். சுதந்திரக் காற்றின் இனிமையைச் சுவாசித்த பின்னர்தான், தாயகத்தின் கொடுமை தெரிந்தது; விடுதலையின் பெருமை தெரிந்தது; தனி மனித சுதந்தரம் மனதில் பட்டது!

"உடன் உழைக்கும் சொந்த நாட்டுக்காரர்களையே வேவு பார்ப்பதா? கேவலம்! தன் சிந்தனையற்றவனய், பாசம் - அன்பு மனிதத் தன்மையின் பிற முத்திரைகளற்றவனய்த் திரிவதா? அவமானம்! அவமானம்! கண்ணுக்கெதிரே தெரியும் விடுதலையின் ஒளியைக் காண மறுத்துக் கண்ணை மூடிக் குருடாகுவதா? கூடாது! கூடாது!" - சிந்தனைக் கதிர்கள் இப்படி ஒளிவிட்டனபோலும். அலெக்சாண்டர், துணிந்து வெளியேறி விட்டான், கடந்தசூன் 24-ம் நாள்.

அவனுக்குமுன் இப்படித் தப்பிக்க முயன்ற கர்னல் மாக்கெய்ல்ஜ. ஸ்ட்ரைகைய்ன் என்பான் பட்டபாடு அவனுக்குத் தெரியும். மருத்துவமனையிலிருந்து தப்ப முயன்ற அவனைக் கைது செய்து. ஒரு சீன விமானத்தில் இரும்புத் திரைக்கு அப்பால் கொண்டு போயினர் என்ன ஆனனே? அவனது புதை குழி எங்கோ? இவற்றை எல்லாம் அறிந்தும் அலெக்சாண்டர் தளராது, வெளியேறிவிட்டான். பர்மாவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தில் அடைக்கலம் கேட்டான். அவர்களும் தந்திருக்கின்றனர், அவன் கருத்தை அவன் கைப்பட எழுதி வாங்கிக் கொண்டு. அந்த வாக்குமூலத்தின் பகுதிகளே, மேலேயிருப்பவை!

பொதுவுடைமையரின் புகழ்பாடும் 'தெருநாவுக்கரசர்'களுக்கு இவன் வாழ்க்கை ஒரு பாடம்! பர்மாவைப் பொதுவுடைமை நாடாக்க, பர்மாவிலுள்ள சோவியத் தூதுவராலயம் வெகுவாக முயன்றதுமன்ற இவனது குற்றச்சாட்டு, ஓர் அபாய அறிவிப்பு - சுதந்தர பூமியினர்க்கு!

"தந்தையர் நிலப்" பெருமை பாடும் விந்தை மனிதனின் நிலை என்ன? முரசறையும் மறவர்களின் பதில் என்ன?

மா. பாண்டியன்

கள்ளுண்டல்

இருள்சூழத் தொடங்கிற்று. துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டுக் கடற்கரையிலிருந்து நான் கிளம்பலானேன்.

மணற்பரப்பைக் கடந்து சாலையை அடைவது சற்றுக் கடினமாக இருந்தது. நெடுஞ்சாலையில் பல்வகைப் பட்ட வண்ண மின்விளக்குகள் ஒளிக் கற்றைகளை உமிழ்ந்து இரவைப் பகலாக்கிக்கொண்டிருந்தன. "விர் விர்" எனப் பறந்துகொண்டிருந்த வாகனங்கள். சாலையைக் கடக்க முயல்வோரைத் திகைக்க வைத்துக்கொண்டிருந்தன.

ஒருவாறு சமாளித்துச் சாலையைக் கடந்து பல வீதிகளைத் தாண்டி என் இல்லம் இருக்கும் சந்துக்குள் நுழையலானேன். பெருங்கூட்டமொன்று என் இல்லத்தினருகே கூடியிருந்தது. என் குடும்பத்திலுள்ள யாருக்கோ ஏதோ நேர்ந்துவிட்டதென எண்ணிப் பரபரப்புடன் அவ்விடம் நோக்கி ஓடினேன்.

நடுத்தர வயதுடைய மனிதன் ஒருவன் தன்னை மறந்து தரையிலே உருண்டுகொண்டிருந்தான். அவன் வாய் வழியே நுரை வழிந்துகொண்டிருந்தது. வினவியதில் அவன் கள்ளுண்டவன் என்ற விளக்கம் கிடைத்தது.

அவனை அவன் வீட்டில் கொண்டு விடுவதற்காக, அவனிடமே அவன் முகவரியைக் கேட்டுக் கொண்டிருந்தனர், சிலர். அவன் சட்டத்திற்குப் புறம்பான காரியத்தைச் செய்ததால், போலீஸ் ஸ்டேஷனில்தான் கொண்டு விட வேண்டுமென வாதாடிக்கொண்டிருந்தனர் சிலர். மற்றொருவர், "என்னய்யா சட்டம்? சட்டம் போட்டுவிட்டால் மட்டும் போதுமா? உழைத்தும் உண்ணுதற்கு வயிறு நிறைய உணவு கிடைக்காததால், பசி, கவலை முதலியவைகளைச் சற்று நேரமாவது மறந்திருப்பதற்காகக் குடிக்கிறான். அவன் அந்தச் சற்று நேரம் இன்பமாக இருப்பதுகூட உங்களுக்குப் பிடிக்கவில்லையே!" எனச் சீறினார்.

இதற்குள் அவனுக்கு வேண்டியவர்கள், ஒரு வண்டி கொணர்ந்து அதில் அவனை ஏற்றினார்கள். வண்டிச் சக்கரம் உருளத் தொடங்கிற்று. என் எண்ணத் தேரின் சக்கரமும் சங்க காலத்தை நோக்கி உருண்டோடியது

கள்ளுண்ணுதலும், கள்ளூட்டுதலும், சங்க கால மக்களிடையே தவருகக் கருதப்படவில்லை. அக்கால மக்களின் வாழ்க்கை வரலாற்றையும், பழக்க வழக்கங்களையும் நமக்குத் தெரிவிப்பது சங்க கால நூல்களாகும். சங்க கால நூல்களிலொன்ருகிய புறநானூற்றில், அக்கால மக்களது வீரம்பற்றியும், போர் முறைபற்றியும், கொடைத் திறன் பற்றியும் பல புலவர்கள் வாயிலான் அறிகிறோம்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் புகழ்ந்து எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற புலவர்

"நெய்யுறப் பொரித்த
குய்யுடை நெடுஞ்சூடு
மணிக்கல நிறைந்த
மணநாறு தேறல்
பாப்புரித்தன்ன வான்
பூங்கலிங்கமொடு
மாரியன்ன வண்மையிற்
சொரிந்து
வேனிலன்ன வென்
வெப்பு நீங்க
அருங்கல நல்கியோனே..."

எனப் பாடிய பாடலில், தன்னைக் காண விழைந்து வந்த பரிசிலர்களைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், எவ்வகையில் வரவேற்கிறான் என்பதன் மூலம் அவனது வள்ளற்றன்மையை அறிந்து மகிழ்கிறோம்

புலவர்கள் அரசனிடம் பரிசில் பெறும் பொருட்டு வேற்றூர்களிலிருந்தும் வருவதுண்டு. அக்காலத்தே போக்கு வரவு சாதனங்கள் மிகக் குறைவானபடியாலும், அவைகள் ஏழை எளியோர்களால் பயன்படுத்திக்கொள்வதற்கு முடியாத சூழ்நிலையில் அமைந்தமையாலும், பெரும்பாலோர் கால் நடையாகச் செல்வதே வழக்கமாக இருந்தது. அவ்வாறு வருபவர்கள் மிகவும் களைப்புற்று வருதலால், அக்களைப்பு நீங்க அவர்களுக்கு ஊனும் மதுவும் அளித்துப் பின்னர் அவர்களது தகுதிக்கேற்பப் பரிசில்களும் வழங்கப்படும்.

கிள்ளிவளவன் அளிக்கும் உணவு வகைகள் எவ்வாறு இருந்தன என்று விளக்குகையில், "நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு" என்பதன்மூலம், தன்னை நாடி எவர் வரினும் அவர்களுக்கு நெய்யிற் பொரித்து தாளிப்பு மணம் நிரம்பிய உயர்ந்த ஊன் வகைகளையே அளிக்கிறார் எனக் கூறி, அவ்வள்ளலது உயர்வு தாழ்வற்ற பரந்த மனப்பாங்கை நாம் காணும்படிச் செய்கிறார் புலவர்.

உணவிற்குப் பின்னர் பருகுவதற்கு அழகான பாத்திரம் நிறைய நல்ல மணமுள்ள உயர்ந்த மதுவும் தரப்படுகிறது என்பதை "மணிக்கல நிறைந்த மணநாறு தேறல்" என்னும் சொற்றொடர் நன்கு விளக்குகிறது.

கற்றறிந்த புலவர்களுக்கு அரசன் பருகுவதற்குக் கள்ளைக் கொடுக்க, அவர்களும் அதை அருந்தி ஆனந்தப் பட்டார்கள் என்பதன்மூலம், அவர்கள் கட் குடித்தலைத் தவருகக் கொள்ளவில்லை என்பது புலனாகிறது.

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் மட்டுமன்றி அக்காலத்தே வாழ்ந்த மற்ற புலவர்களும், கள்ளுண்ணுதலையும், அரசர்களாலும் வள்ளல்களாலும் கள்ளூட்டப்படுதலையும், தவருகக் கருதாது பெருமையாகவே கருதியுள்ளார்கள்.

எடுத்துக் காட்டாக ஆலியார் என்ற புலவர் பாடிய மற்றுமொரு பாடலையும் புறநானூற்றில் காணலாம்.

"எமக்கே கலங்கற்
றருமே தானே
தேறலுண்ணு மன்னே"

அரசன் மற்றவர்களுக்குக் கலக்கிய கள்ளைக் கொடுத்துத்தான் தெளிந்த கள்ளையே உண்பான் என்பது இதன் மூலம் தெரிகிறது. கள்ளின் சத்து யாவும் அடிப்பரப்பில் தங்கிவிடுதலான், பயனுள்ள அதை மற்றவர்களுக்கீந்து, பயனற்ற தெளிவை தான் உட்கொள்கிறான் என்கிறார்.

ஆதலால் மேற்காணும் பாடல்களிலிருந்து சங்க கால மக்கள்கட் குடித்தலைத் தீமையற்ற பழக்கமாகவே கருதினார்கள் எனக் கருதுதற்கு இடமளிக்கிறது

அவ்வாருனால் கட்குடித்தல் தீமையற்ற செயல்தானா? எனச் சிலர் ஐயுறலாம். தற்காலத்தில் நாம் பொழுதுபோக்கிற்காகவும்சற்று மந்த முற்றபோது சுறு சுறுப்பு ஏற்படுவதற்கும், காபி தேனீர் முதலிய பானங்களை அருந்துவதுபோல், அவர்களும் களைப்பை அகற்றுவதற்காகவும் உற்சாகத்திற்காகவும் மதுவினை உண்டிருக்கலாம்.

நஞ்சு உண்டால் மரணம் எனத் தெரிந்திருந்தும் மருத்துவர்கள் சில வியாதிகளுக்கு மருந்துடன் நஞ்சை (Poison) அளவுடன் கலந்து முறைப்படி கொடுத்து நோய்வாய்ப்பட்டிருப்போரை மரணப்பிடியிலிருந்து விடுவிக்கிறார்கள். சங்ககால மக்களும் மதுவினை முறை தெரிந்து அளவுடன் அருந்தியிருப்பார்கள். அதனுற்றான் அது அவர்களுக்குத் தீமை பயப்பதாகத் தெரியவில்லைபோலும்.

மேலும் போர்க்களத்திற்குச் செல்லும் முன் கட்குடித்தலை நல்ல சகுணமாகவும் கருதி வந்திருக்கிறார்கள் அவ்வாறு சென்றால் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கிருந்தது என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

"எழுவணி சீறா
றிருண்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி
நிற்பத்—தொழுவிற்
குடக்கணி கொண்டுவா
வென்றாள் குனிற்ற்
றடக்கையாய் வென்றி தரும்"

என வற்புறுத்துகிறது.

அக்கால மக்கள் கள்ளை உணவுடன் கலந்தும், உணவிற்குப் பிறகும். அளவும் முறையுந் தெரிந்து உண்ட காரணத்தால் அது கற்றறிந்த புலவர்களாலும் கண்டிக்கப்படவில்லை எனக் கொள்ளலாம். ஆனால் இங்கோ உண்ண உணவில்லாத காரணத்தால் பசித்துன்பத்தை மறப்பதற்காக அளவும் முறையுந் தெரியாது அருந்தி சாக்காடு நோக்கிச் செல்கின்றனர்.

— ம. சந்திரசேகரன்

தலைநகர் அரசு, பாண்டியன் தலைநகரில்!





கடந்த 26—7—'59-ம் தேதியன்று மாநகராட்சி மன்றத் தலைவர் அ. பொ. அரசு அவர்கட்கு மதுரைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் ஒரு மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்பை ஒட்டி விருந்து, ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகிய மூன்றும் நடந்தன. மதுரைநகர் இதுவரை கண்டிராத அளவு மாபெரும் ஊர்வலமான இது, மதுரைநகர் அரசியல் வரலாற்றில் கழக முத்திரையை அழுத்திப் பதித்திருக்கிறது. பாராட்டுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், எஸ். முத்து எம். சி., கே. எஸ். சந்தானம், எம். சி., சௌந்தரராசன் பி. ஏ. ஆகியோர் பேசினர்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 6 ‖ 1—8—'59 ‖ இதழ் 7

தென்னகமெங்கும் எதிர்ப்பு ! இன்னும் நமை ஆளத் தில்லிக்கென்ன கொழுப்பு ?

மதராஸ் பட்டணத்தில் மன்னத்தின் குரல் !

தொடர்ந்து பல தோல்விகள் ! அடுத்தடுத்துப் பல ஏமாற்றங்கள் ! நெஞ்சம் சொல்லக் கொதிக்கும் வஞ்சம் பல அன்றாடம் நடக்கின்றன! ஆயிரம் முறை சொல்கின்றனர், நாமெலாம் சகோதரரென்று ! ஆயினும் நாள்தோறும் கழுத்து நெறிக்கப்படுகிறோம் !

"இதம் தரும் வாழ்வையும் நலம்வளர் நாட்டையும் படைக்கப் போகிறோம் ! அதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டுகிறோம் ! அடுத்தடுத்து வளரும் அவற்றால் நாடு செழிப்பது உறுதி ! நல்லோர் வாழ்வதும் உறுதி ! நாம் எல்லோரும் தலைநிமிர்வதும் உறுதி !" என்று வேறு மேடைக்கு மேடை கத்திக் கிழிக்கின்றனர் பாரத ரத்னங்கள் !

நம்பினர் சிலர், வெம்பிய வாழ்வு மாறுமென்று. வருணித்தனர் பலர், திருந்திய வாழ்வு மலருமென்று. அற்ப மகிழ்ச்சியால் ஆகாயம் கிழியக் கத்தினர், அன்னார் ! நம்மையும் நம்பச் சொல்லினர். நாமோ, வரும் பொருளுணர்ந்ததால், வரலாறு அறிந்ததால், அன்றே சொன்னோம் உண்மையினை. வடவர் அரசு நமக்கெந்த நன்மையும் செய்யவில்லை; செய்யாது என்ற உண்மையை, பல மேடைகளிலே - ஏடுகளிலே - வாதங்களிலே - அரங்குகளிலே சொன்னோம் ! அன்று காங்கிரசார் மட்டுமல்ல வேறு எதிரணிகளைச் சேர்ந்தோரும் கெக்கலி கொட்டினர்.

"நாட்டைப் பிரித்துப் பேசுகின்றனர்; வடக்கு, தெற்கு என்று தற்கொலைப்படை நடாத்துகின்றனர். இன்று எதிர்த்துப் பேசுவோர் நாளை காணத்தான் போகின்றனர். பூத்துக்குலுங்கும் பொன்னான காட்சிகளை ! நம் வீட்டு முற்றத்தில் நிம்மி கும்பியடிப்பாள் ! சுரையா கீரைப் பாத்தியில் திரிவாள் ! இந்திரா கேரளத்து முந்திரிப்பழம் தருவாள் ! நம் காமராசர் அங்குச் சென்று இராமகாதை சொல்வார் ! அந்நாட்டு பந்த் தென்னாட்டுத் திடல் போந்து, பந்து விளையாடுவார் ! ஆகா, எத்தனை கண்கொள்ளாக் காட்சிகள் நமக்கு விருந்தாகப் போகின்றன—தெரியுமா ? இழக்கலாமா இந்த நல்வாய்ப்பை ?" என்றெல்லாம் பேசினர். ஏதோ, பெரிய காவியத்திற்கு உரை சொல்லிக் கை முறிந்துவிட்டது போன்று, பெருமூச்சு விட்டுக்கொண்டனர். நம்மிலும் பலர் இப்படி ஏமாந்திருக்கின்றனரே என்று நாம் வருந்தியதற்குப் பலனில்லாமல் போகவில்லை ! அங்கங்கே சில நம்பிக்கை விடிவெள்ளிகள் உதயமாகாமல் போகவில்லை !

தொழிலதிபர் அனந்தராமகிருட்டிணன், தொல்லைகள் வரும் வழியை எடுத்துக்காட்டினார் !

நிதி அமைச்சர் சுப்பிரமணியம்கூடச் சலித்துக்கொண்டார், பொறியற் கல்லூரிகள் போதிய அளவில்லை என !

கல்கியும் பிற ஏடுகளும் கண்டித்து எழுதின தில்லியரசை !

"தமிழகத்தில் மட்டும்தானே இக்கூச்சல் ?" என்று கேலியாகப் பேசும் வாய்ப்பைத் தகர்த்தெறிந்தனர், ஆந்திர அமைச்சரும், கருநாடக எழுத்தாளர்களும் !

"மலைஞாலத்தில் என்ன வாழ்கிறது ? இங்கும் மாரடிப்பும் ஒப்பாரியும் தானே ! தில்லியரசு எள்ளி நகையாடுகிறது எங்களை; தள்ளிவைக்கப்பட்ட மனையாள் நிலையிலே தவிக்கிறோம் நாங்கள் !" என்று ஒரு புதுக்குரல் கிளம்பியது ! சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டுத் தட்டித்தடுமாறிக் கிளம்பும் அப்புதுக் குரல் யாருடையது என்று பார்த்தோம். ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, புகழ்பாடும் முகாமிலிருந்து அப்புதுக்குரல் வந்திருக்கிறது. விந்தையுடன் அவரைப் பார்த்தோம் ! அவ்வுரு தன் பெயர் சங்கரன் நம்பூதிரிபாடு என்றது ! "நீ பட்டபாடு உன்னை உணரச்செய்திருக்கிறது. இன்னும் உரத்த குரலில் ஓங்கி, ஓங்கிப் பாடு ! பாடு ! உனக்கு வந்த கேடுதனைப் பாடு !" என்றோம்; நிலைமையை வரய்விட்டுச் சொல்லியதற்கு நன்றி சொன்னோம் ! சிலர் கிளம்பினர்; "ஆளத்தெரியாத பொதுவுடைமையர் அதை மறைப்பதற்கே, 'ஆதரவு தரவில்லை தில்லியரசு' என்கின்றனர். நம்பலாமா அதை ? இதுவும் பொதுவுடைமையின் டொப்களுள் ஒன்று !" என்று மறுத்தனர்.

ஆனால் அதுவும் பொய்யென்று உறுதிப்படுத்திவிட்டது, அண்மையில் கிளம்பியுள்ள குரல் ஒன்று. அந்தக் குரல் கிளம்பியதும் அருகிலிருந்த காங்கிரசார் மூஞ்சியைக் கவிழ்த்துக்கொண்டனர். "சும்மா கிடக்கும் சங்கை எடுத்து ஊதிக் கெடுக்கிறானே ஆண்டி !" என்றலுத்துக்கொண்டனர் சிலர். அப்படி நடந்ததுதான் என்ன ?

கேரள மக்களைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கும் புதிய தலைவராம் மன்னத்து பத்மநாபனுக்கு, சென்னையில் 28-7-59 அன்று ஒரு வரவேற்பளித்தனர், சென்னைக் காங்கிரசார் சிலர் கேரள விடுதலைப்போட்ட ஆதரவாளர்கள் என்ற உருவில். நாயர் சமூகத்தின் தலைவன் என்ற முறையில் அரசியலில் மதத்தைக் கலக்க முனைந்திருக்கும் அந்தப் பெருமகனார் கேரளத்தில் பொதுவுடைமைக் கட்சிக்கு வந்த வழியை விளக்குகையில் இப்படிப் பேசினார் : **"படித்த மக்கள் பெருகித் தொழிற்சாலைகள் குறைந்திருக்கும் இடத்தில்தான் பொதுவுடைமை வளரும் !... கேரளத்து மக்கள் போதிய தொழிலில்லாததால் வாடிவதங்குகின்றனர். ஏழ்மையில் உழல்கின்றனர். வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன், தில்லி தக்கபடி மலைஞாலத்திற்கு எத்திட்டத்திலும் உதவவில்லை என்று !"**

நம்பூதிரிபாடுகள் மட்டுமில்லை; அனந்தராமகிருட்டிணர்கள் மட்டுமில்லை; "கல்கி" தலையங்கக்காரர் மட்டுமில்லை; எல்லோரும், வீட்டுக்கு வீடு சென்று இக்குரலை ஒலிக்கும் காலம் தொலைவிலில்லை; அது ஒரு துயருமில்லை ! அதன் ஒரு கட்டம்தான் மன்னத்தின் இந்தக் கணிப்பு.

நாம் தரும் வரிப்பணத்தால்தான் கொழுக்கிறது தில்லி ! ஆனால் நம்மை—நம் தென்னகத்தைக் கவனிப்பதில்லை அவர்கள். வெடி முழக்கங்களும் தடியடிகளும் இந்த உண்மையை மறைத்துவிடா; இதை உரைக்கும் வாயைக் கிழித்துவிடா ! அண்மையில் வந்த சேதி சொல்கிறது—பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டமும் கைவிடப்பட்டதென்று !

"ஆளத்தெரியாமல் நம்பூதிரிபாடு பேசுகிறார்; வெறியுணர்வால் தி. மு. கழகம் சொல்கிறது; கன்னடத்தார் கண்கள் காமாலைக் கண்கள் !" என்றெல்லாம் சொல்கின்ற காங்கிரசாரே, இதற்கென்ன பதில் சொல்கிறீர்கள் ? கேரளத்தின் நிலையை நன்குணர்ந்தவர் என்று உங்களால் நம்பப்படுகிற—பாராட்டப்படுகிற மன்னத்தின் குரல், இது. புறக்கணிக்கப்போகிறீர்களா ? "புளு"கென்று தள்ளப்போகிறீர்களா ? புத்திமதி என்று ஒத்துக்கொள்ளப்போகிறீர்களா ?

தில்லியரசே ! ஆட்கொல்லி அரவே ! இன்னும் எத்துணை நாள் எம்மை இப்படி வஞ்சிக்கப்போகிறாய் ! ★

கண்ணீர் மாறுது!

கல்விக் கூடத்திற்கொரு புத்தொளியாய் — அரசியலையும் கலையையும் கண்டஞ்சும் ஆசிரியர்களிடை ஒரு விதிவிலக்காய்-அழகிய பேச்சாளராய் - இனிய எழுத்தாளராய் - வண்ணாரப்பேட்டை வெள்ளுடை வேந்தர் தியாகராயர் கல்லூரி முதல்வராய் விளங்கி வந்த உயர்திரு. ம. கி. சண்முகம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

ஐயோ, நாடகத்திலும் பேச்சிலும் விளையாட்டிலும் மாணவர்கட்கு நல்ல அக்கறை வேண்டுமென்று இனித் தங்களைப்போல் அக்கறை எடுத்துக் கொள்ளப் போவார் யார் ?

தியாகராயர் கல்லூரியின் வளர்ச்சிக்கு நீங்கள் ஆற்றிய தொண்டினைப்போல் இனி ஆற்றவல்லார் யார் ?

ஐயகோ ! தங்கள் மறைவால் ஆசிரியர் உலகம் ஒரு தலைவனை இழந்தது !

தியாகராயர் கல்லூரி ஒரு காவலனை இழந்தது !

திராவிடம் ஒரு கல்வி அறிஞனை இழந்தது !

இத்துணைத் துன்பத்தையும் "தென்றல்" எப்படித் தாங்கிக்கொள்ளும் ? திராவிடம் எவ்வண்ணம் பொறுத்துக் கொள்ளும் ?

பாதி வழியிலே மாறும் பாதரசக் குணத்தோர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டுப்பாடும் கண்ணியமும் நிறைந்த கடமைகளைத் தென்னாட்டிலும் வட நாட்டிலும் அமைந்து வரும் அரசியல் சூழ்நிலைகள் முக்கியப்படுத்திக் கழகத்தவரின் பொறுப்புகளைப் பெரிதும் உறுதிப்படுத்தி வருகின்றன. கழகத்தின் கண்ணெதிரே புதிய கட்சிகள் உருவாயின; உருவத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டன, உருப்படாமல். உருத் தெரியாமல் உடைந்து போன கண்ணாடித் துண்டுகளாகின்றன. உங்கட்கெல்லாம் உதாரணங்கள் தேவையானால் கடந்த காலத்தைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். சென்ற பொதுத் தேர்தல் துவங்கிய நேரத்தில் காங்கிரஸ் கட்சியினால் இலாயக்கற்றவர்கள் என்பதாகக் கருதப்பட்டவர்கள் சீர்திருத்தக் கமிட்டியென்ற பெயரினாலே தங்களை விளம்பரப்படுத்திக்கொண்டு கழகம் தவிர்த்த ஏனைய எதிர்க் கட்சிகளையும் பல்வேறு இடங்களிலே இணைத்துக்கொண்டு போட்டியிட்டனர். 'பார்வர்டு பிளாக்' என்னும் முத்துராமலிங்கரின் முகாமும் இவர்களுடன் சேர்ந்தது. அகில இந்தியாவின் புதியதோர் ஜனநாயக சக்தியென்று ஒரு புதிய கட்சியைத் தயார் செய்தனர். காமராசருடைய மந்திரி சபையில் இடம் எதிர்பார்த்து ஏமாந்துவிட்ட டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, எல். எஸ். கரையாளர் என்ற இருவரையும் எஸ். எஸ். மாரிசாமி என்பவரையும் துணைக்கு வைத்துக்கொண்டு காமராஜ் எதிர்ப்பில் தீவிரக் கண்ணோட்டம் வைத்து அதனையே கட்சியின் வேலைத் திட்டமாக்கினர். வேங்கடகிருட்டிணர் என்பவரையும் வி. கே. இராமசாமி என்ற நல்லவரையும் தலைவர்களாக்கிப் பழிவாங்கிக்கொண்டார்கள்! தாயகத்தின் நல்வாழ்வும், மொழி வளர்ச்சியின் சிறப்பும், வடவர் ஆதிக்கமும் இவர்களது இதயங்களில் இடம் பெறவில்லை! எந்தவித இலட்சியமும் இல்லாமல் காங்கிரசின் பெயராலே ஊருக்கு ஊர் மின்னல் வேகத்திலே சுற்றுப் பயணம் செய்து படை திரட்டினார்கள். கழகத்தின் சார்பில் அன்றே கேட்டோம், "உங்களுடைய மூல முழக்கமென்ன? முன்னேற்றக் கட்சக்கும் — காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டிக்கும் எந்த வகையிலே தொடர்பு? முத்துராமலிங்கர் புதிய கட்சியின் தலைவரென்றால் அவருடைய கட்சியின் நிலை என்ன? சசிவர்ணம் என்பவர் எந்தக் கட்சியின் சார்பிலே சட்டசபைக்குச் சென்றார்? முதுகுளத்தூர் விவாதம் முடிந்தபின் அவரது முழக்கம் இல்லையே ஏன்?" என. இவைகளையெல்லாம் செவிமடுத்துப் பதிலுரைக்க எந்தத் தலைவரும் முன் வரவில்லை. தேவர் விடுதலைக்குப் படை திரட்டுவதே தங்கள் வேலையெனச் சொல்லிவிட்டனர்! மதுரை இவர்களின் தலைமையிடம். தாக்கீதுகள் கிளம்பியதும் இங்கிருந்துதான்! கம்யூனிஸ்ட் கட்சியும் கலாச்சாரக் கழகமும் இவைகளின் தலைவர்களும் பல நேரங்களில் இரவலாகக் கிடைத்த காரணத்தால் கழகத்தை எதிர்த்தனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமான வேலையைத் தராமல் ஜனநாயகக் காங்கிரஸ்காரர்கள் தங்களின் திடீர் வேடங்களைக் கலைத்துவிட்டு உண்மை உருவங்களைக் காட்டிவிட்டனர்! இந்த வேடிக்கையான நிகழ்ச்சிகளை இவ்வளவு விரைவில் நாம் எதிர்பார்க்காவிட்டாலும், சிறிதுகாலத்திற்கு முன்பாகவே இதற்கான அறிகுறிகள் தென்பட்டன! "காமராசருக்கு அரசியல் ஆசானாக இருந்தவன் நானே" என்று பல மேடைகளில் முழக்கமிட்ட நெல்லை சோமயாசுலு புதிய கட்சியைவிட்டு ஒதுங்கிநின்று விலகி ஓடிய நேரத்திலேயே காமராசர் எதிர்ப்பு அணி கலகலத்தது! 1957-ம் ஆண்டுக் கம்பன், காரைக்குடி வீரன் என்ற விருதுகளைப் பெற்ற சா. கணேசன் பூர்வாங்க மாநாட்டில் புதிய கட்சிக்குப்பெயர்சூட்டிக்கொடி அமைப்பினை உருவாக்கித் தந்தவர் கட்சியின் பாதையைவிட்டு நெடுந்தொலைவுக்குச் சென்ற பின்பும்கூட 'மாரிசாமியின் மதுரைவீரன்'கள் மார்தட்டியே முழக்கமிட்டனர்! நகரசபைத் தேர்தல்களில் — மதுரையில் மட்டும் கூட்டணி தேவையென்று முயற்சியிலே வெற்றிபெற்றவர் கிருஷ்ணமூர்த்தி. முடிவிலே கழுத்தறுக்கும் கம்யூனிஸ்ட்களையே கண்ணீர்வடித்துக் கதறிக் கதறி அறிக்கைகளிலே அழும்படி செய்தார்! அகில இந்தியாவுக்கும் வழி காட்டியவர்கள் இன்றளவும் மதுரை வீதிகளிலேயே சுற்றிக்கொண்டுள்ளார்கள்! இந்த நேரத்திலேதான் முத்துராமலிங்கரின் ஏவுகணைகள் கரையாளரைத் தாக்கிவிட்டன. கட்சியின் வரவுசெலவுக் கணக்குகளைக் காட்டவில்லையெனக் கடுமையான குற்றச்சாட்டு. கரையாளர் கட்சியின் விதிமுறைகளுக்கு மாறாக நடந்துள்ளதால் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்! இவைகளுக்கு மறுப்பாக—எதிர்ப்பாக, முத்துராமலிங்கத் தேவரும் சசிவர்ணத் தேவரும் கணக்குக் காட்டவேண்டியவர்கள். பொதுமக்களின் விரோதிகள். நேதாஜி பெயரினால் ஏமாற்று வேலை செய்கின்றனர். பணம் திரட்டுவது — கூட்டுச்சதி செய்வது மோசடி நடத்துவது. இவைகளே இந்தக் கனவான்களின் வேலை. இவர்களினால்தான் ஜனநாயகக் காங்கிரஸ் உருக்குலைகிறது எனக் கரையாளர் கூறியிருக்கிறார்! மாரிசாமியும் மற்ற தலைவர்களும் இன்றளவும் ஊமைகளாகவே இருக்கின்றனர். சிவஞானச் சாம்பிராணி என்ற இவர்களின் வழிகாட்டியும் இரவல் பேச்சாளரும் இதுபோன்ற செய்திகளைக் கேட்டு ரசித்திருக்கவும் கூடும்! இவர்களின் காலடியில் விழுந்து வணங்கிய திருவாடானைக் கம்யூனிஸ்ட்கள், இவர்களைத் தோளிலே தூக்கித் தூத்துக்குடி வந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள், கழகத்தை எதிர்க்கப் பயன்பட்ட புதிய ஜனநாயகங்களின் இழிநிலையை உணரட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை, மக்களின் இதயங்களிலே கழகம் பெற்றுள்ள மதிப்பான இடத்தைக் கணக்கிட்ட கறுப்புக் கண்ணாடி இராசகோபாலாச்சாரியார் காங்கிரசைக் கவிழ்ப்பதற்கும் சரியான எதிர்ப்பினை உருவாக்குவதற்கும் கழகமே சிறந்த கருவியென எண்ணினார். அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்தார்: ஒரே மேடையில் பேசினார். நாட்டுப் பிரிவினைக்குப் புதிய வழிகளைக் கூறினார். ஆனால் இன்றோ ஒரு புதிய கட்சியின் தலைவராகி நேருவை எதிர்த்துக் கூட்டம் சேர்த்துவிட்டார்! திராவிட முன்னேற்றக் கழகம் "இராசகோபாலர்களின் ஆதரவினை — பாராட்டு மொழிகளை எந்த அளவுக்கு வரவேற்றது? எந்த வகையில் எதிர்காலத்தில் இவர்களைப்பற்றிக் கணக்கிடும்?" என்பதையெல்லாம் எண்ணிப் பாராத அந்த மாம்பலத்து மாமுனிவரும் மயிலாப்பூர் வாசிகளின் மகானுமானவர், கழகம் அவரின் ஆணைக்குச் சாத்து நிற்கும் எனக் கருதிவிட்டார்! குல்லூப்பட்டர்களை நன்குணர்ந்த நாடகத்துக் காகபட்டரும் கங்கு பட்டருமான நமதறிஞர் அண்ணா, அவர்களைத் தம்மொழியால் வென்றார்! சுதந்திரா கட்சியெனும் புதிய பதவி வேட்டைக்காரர்களுக்குப் போதகராகிவிட்டார் ஆச்சாரியார்! காங்கிரசுக்குச் சரியான எதிர்க் கட்சி இவர்களது தானாம். ஆச்சாரியாரின் இந்தி எதிர்ப்பு வேகம் இப்போது நாகபுரித்தீர்மானத்துக்குப்போய்விட்டது. இவருடைய வாழ்த்தினைப் பெற்றுள்ள கட்சி, காகிதப் படகுதான். பெரியதோர் தென்னகத்துச்சமுதாயத்தைத் தன்னகத்தே கொண்டு அரசியலை இழுத்துச் செல்லும் என்ற நம்பிக்கை நம்மிலே எவருக்குமில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னபடி கப்பலே கவிழும்போது கட்டுமரம் கரை சேர்வதெப்படி? பொது மக்கள் அவர்களிடத்திலே இல்லை. உயர்தரப் பிரபுக்களும் சீமான்களும் இருக்கிறார்கள்! பம்பாயும் பெங்களூரும் சென்னையும் புதிய கட்சிக்கு மேடையமைத்துத் தந்துள்ளன. தென்னாட்டினை ஒரு உருவமாக்கி இதன் வளத்தினையும் வருவாய்த் துறைகளையும் கணக்கிட்டு வடவர் சுரண்டும் பிடியிலேயிருந்து விடுபட்டுக் கொள்ள வேண்டுமென்ற கழகத்தின் குறிக்கோளை, விடுதலைக்கான நன்முயற்சிகளை எதிர்த்து முறியடிக்க முனையும் முகாம்களிலே ஒன்றாகத் தான் சுதி குறைந்தும் பெருங்குரல் தருகின்ற சுதந்திரா கட்சி செயல்படமுடியும்! நமது இலட்சியங்களை மறைத்தும் குறைத்தும் விடக்கூடிய தத்துவங்களை இந்தத் தயாபரக் கட்சியினர் மக்களுக்குத் தரப் போவதில்லை. இவர்கள் பேசும் கொள்கை நம் தாயகத்தை மீட்கப் போவதில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப்பற்றினையும் மொழியுணர்வையும், தாயகம் தனித்தியங்கவேண்டும் என்ற வேட்கையினையும் பிரஜா சோசலிஸ்ட்களும், சோசலிஸ்ட்களும் மதிநுட்பம் பெற்றவர்கள் என்ற பெருமையுடன் மனதிற்குள்ளே பாராட்டுகிறார்கள்! தனிப்பட்டுப் பேசுகின்ற நேரங்களிலே நம்மோடு வாதாடுவதற்குப் பதிலாக வாழ்த்துகிறார்கள். நம்மக்கள் கழகத்தின் பின்னே வருவதையும் வரவேற்கிறார்கள்! ஆனால் அகிலஇந்தியக் கட்சிகள் என்ற நிலை வரும்போது தங்களின் தன்மானத்தை விலைபேசி விடுகிறார்கள்! வடநாட்டுத் தலைவர்களின் நேசம் ஒன்றிற்காக சின்னத்துரைகள் இந்திமொழியின்மீது பாசம் வைத்துள்ளார்கள்! காலதாமதமாகவாவது தன்மானம்காத்திடவேண்டும் என்ற உணர்ச்சி பெற்றுள்ள எஸ். சி. சி. அந்தோனிகள் தங்களது எதிர்காலத்தைத் திட்டமாகவும் விரைவாகவும் முடிவு செய்யவேண்டும். தனித்தியங்கப்போகும் சோசலிஸ்ட் கட்சியின் இலட்சியங்கள் என்ன என்பதை அவர்கள் அறிவிக்கட்டும். லோகியாவின் இந்தி வெறியை எதிர்த்த சின்னச்சாமிகளின் எண்ணிக்கை பெருகவேண்டும். இயக்கம் எதுவென்றாலும் இந்தத் தாயகத்தை இனியாவது மறந்திடலாகாது தாய்நாட்டின் விடுதலையைப் பெரியதோர் கடமையாகக் கொண்டுள்ள கழகத்தின் காலடி வழிவராவிட்டாலும், தூரத்திலே நின்று இந்த இலட்சியப்பாதையைக் கவனித்தால் போதும்; கணக்கிட்டால் போதும். என்றேனும் ஒருநாள் அவர்களின் இதயக்கதவுகள் நம்முடையதத்துவங்களுக்காகத் திறக்கப்படப் போவது உறுதியே! எங்கிருந்தோ வருபவர்களுக்குக் கொடியேந்துவோராக சோசலிஸ்ட் கட்சியிலேயிருக்கின்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள் என்றென்றும் இருந்துவிடக் கூடாதென்பது கழகத்தவரின் கனியும் இதயத்தின் ஆசை என்போம்! தமிழ்நாட்டு மக்களின் எண்ணிக்கையைப் பெருமளவில் இழுத்துச்செல்லும் கவர்ச்சியை — ஆற்றலைக் கொள்ள முடியாத காரணத்தைக் கண்டறிய வேண்டிய கடமை சோசலிஸ்ட் கட்சியினருக்குண்டு! இந்தக் கட்சியை ஏணியாக்கி உயர வளர்ந்த செயப்பிரகாசரின் இன்றையக் காட்சியினைக் காண்பவர்கள் இவர்கள் தவறி விழப்போகும் பள்ளத்தாக்கினையும் அதன் நிலையையும் உணரமுடியும். சோசலிஸ்ட்களின் உள்ளங்கள் மாறினால்தான் தமிழ்நாட்டு அரசியலின் உண்மையான உருவத்தைக் காண முடியும்! விரைவிலேயே இதற்கான முயற்சிகளைச் செய்வார்களாக!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களும், அந்த இலட்சியங்கள் இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களிலே வளர்த்து வருகிற விடுதலை ஆர்வமும், இந்த ஆர்வம் நாடெங்கும் திரட்டிக் காட்டுகின்ற வீரப்படையினரையும் குறைத்து மதிப்பிட இந்திய துணைக்கண்டத்தின் எந்தக் கட்சியும் தயாராக இல்லை. இதனை நாடு சுற்றுவோர் மொழிகளும், ஏடுகள் காணபோர் எண்ணங்களும் எடுத்துக்காட்டுகின்றன. எளிதிலே புரிந்துகொள்ள மறுப்பவர்கள், நம்மாலே மன்னிக்கத் தக்கவர்கள். புரிந்துகொண்டும் புலம்பலை எரிச்சலாக்கி, வீணுரைகளை ஈட்டிகளாக்கி கழகத்தின்மீது வீசுவோர் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் மட்டுமல்ல; மக்கள் மன்றத்தாலே தண்டிக்கப்பட விரும்புபவர்கள்கூட!

—கூடலரசன்

பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
திண்டுக்கல்ரோடு, மதுரை.

கேரளத்து ரோஜா!

நான் மேலாளராகப் பணிபுரியும் அந்த அலுவலகத்திற்கு ஒரு "தனி உதவியாளர்" தேவையாக இருந்தது அதற்கு வேண்டிப் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தோம். அந்த ஒரு வேலைக்கு ஏறக்குறைய இருபது விண்ணப்பங்கள் வந்தன. அவைகளில் ஆறு பெண்களும், எட்டு பட்டதாரிகளும். மீதி எம். ஏ. சிறப்புப் பட்டதாரிகளும் அனுப்பிய விண்ணப்பங்கள் இருந்தன.

அன்றுதான் விண்ணப்பதாரர்களுக்குப் பேட்டியளிக்கும் தினம் எல்லா விண்ணப்பதாரர்களும் வந்திருந்தனர். நான்தான் பேட்டி கொடுத்துக்கொண்டிருந்தேன். வந்திருந்த இருபது பேர்களில் எனக்கு இரண்டே பேர்தாம் பிடித்திருந்தது. கோபால் எம். ஏயும் பத்மினி பி. ஏ. யும்தான் நான் கேட்டவற்றுக்கு திருப்திகரமாகவும், தைரியமாகவும் பதிலளித்தனர் மற்றவர்கள் அவ்வளவு பயனில்லை. சிலர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தனர். ஆனால் பதிலில் படபடப்பு இணைந்து இருந்தது. ஒரு சிலர் பதில் தவறாக, ஆனால், தைரியமாக அளித்தனர். எனவே மேற்சொன்ன இருவரை நான் மேலிடத்தின் விருப்பத்திற்குத் தேர்ந்தெடுக்க அனுப்பிவிட்டேன்.

பெண்ணென்ற காரணத்தாலும், பேரழகி என்ற நிலையாலும் பத்மினி தேவி எங்களுடைய இல்லை, என்னுடைய "தனி உதவியாளராக"த் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

என்னென்ன பணி, எப்படியெப்படி செய்ய வேண்டுமென்று நான் அவளுக்கு விளக்கிக் கூறினேன். என் அறையை ஒட்டிதான் அவளுடைய சிறிய அறையும் இருந்தது.

பத்மினி மிகவும் அடக்கமானவள் போலும். வேலையிருந்தாலன்றி என்னிடம் பேசமாட்டாள். ஏன் என் அருகில் வருவதோ, இல்லை, என்னை ஏறிட்டு பார்ப்பதோகூட அதிகம் இல்லை. நான்கூட அவளிடம் அப்படித்தான் நடந்துகொண்டேன்.

பொதுவாக அலுவலகங்களில் பணிபுரியும் மேலாளருக்கு, அவரின் கீழ் இருக்கும் பெண் தனி உதவியாளர் மீதோ, பெண் சுருக்கெழுத்தாளர் மீதோ காதல் ஏற்படுவது வழக்கம். நான் அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இடங் கொடுக்கக்கூடாது என்று மிகவும் கண்டிப்புடன் இருந்தேன்.

இப்படித்தான் ஒருநாள், ஒரு கணக்கன் - இளைஞன். மற்றொரு பெண் கணக்கருக்கு ஒரு காதல் கடிதம் எழுதி, பின் என் கவனத்திற்கு அது வந்தது. உடனே அவனை அழைத்து ஒருவாரம் விலக்கிவைத்து எச்சரிக்கைக் கடிதமும் கொடுத்தேன். அதிலிருந்து யாரும் மூச்சுகூட விடமாட்டார்கள் காதல் என்று. சுருங்கச் சொன்னால் நான் ஒரு 'காதல் கொல்லி.' அப்படிப்பட்டவன் பத்மினியிடம் பரிவுகாட்டியோ, பிரியத்தைக் கொட்டியோ பேசுவேனா ?

அன்று ஓர் அவசர கடிதத்தை அனுப்பவேண்டும். அதற்கு வேண்டிய குறிப்பைக் கொடுத்து, கடிதத்தைத் தயார் செய்துகொண்டு வா என்று பத்மினியை அனுப்பினேன்.

சிறிதுநேரத்திற்குள் கடிதம் வந்தது. வாங்கிப் படித்தேன். நன்றாகத்தான் இருந்தது. தவறு ஏதும் இல்லை. 'பரவாயில்லை' என்று எண்ணிக் கொண்டு கடிதத்தை வைக்கப் போனேன். என்ன இது ?

மிஸ். செல்வநாயகம் என்றல்லவா இருக்கிறது ? மிஸ்டர் அல்லவா இருக்கவேண்டும் ! போயிற்று ! எல்லாம் போயிற்று ! பாழ் ! குட்டிச்சுவர் !

எனக்கிருந்த ஆத்திரத்தை மணி மீது காட்டி ஓங்கியடித்தேன். ஓடி வந்தாள்.

எனக்கு ஆத்திரம் அடக்கமுடியாமல் வந்தது. "என்னம்மா, இங்கெல்லாம் நீங்க வேலை செய்ய வர்றீங்களா ? இல்லை, விளையாட வர்றீங்களா ? முகம் வாடாம மேக்கப் செய்துகிட்டு, மினுக்கிக்கிட்டுத் திரியறதுக்குதானே நீங்க வேலைக்கு வர்றது ! கொஞ்சமாவது "சென்ஸ்" வேணும். இதோ பாரம்மா இது என்ன மிஸ்டருக்கு மிஸ் போட்டு இருக்கீங்க. நீங்க போட்டிருக்கிற மிஸ்ஸினாலே நாம காண்ட்ராக்டையே மிஸ் பண்ணவேண்டியதுதான்" என்று கத்திவிட்டு அந்தக் காகிதத்தை அவள்மீது விட்டெறிந்தேன்.

என் பேச்சில் அவள் கூனிக் குறுகிக்கொண்டாள். அப்பொழுதும் என் ஆத்திரம் அடங்கவில்லை. "உம்" என்று ஆங்காரமாகக் கூறிவிட்டு அவளை ஒருமுறை முறைத்தேன்.

தலை குனிந்தவாறு அவள் அக் கடிதத்தை எடுத்துச்சென்றாள்.

கொஞ்சநேரம் கழிந்து வேறொரு கடிதம் வந்தது. வாங்கிப் பார்த்துக் கையெழுத்துப் போட்டு அனுப்பினேன்.

மணி நான்கு அடித்தது. அலுவலகம் ஐந்து மணிக்குத்தான் முடிவடைகிறது. நான் நாலரை மணிக்கு அலுவலக விஷயமாக ஓர் அமைச்சரைக் காண வேண்டி இருப்பதால் போகப் புறப்பட்டேன். போகுமுன் சில கடிதங்கள் குறித்தும் குறிப்புகள் கொடுக்க பத்மினியின் அறை பக்கம் வந்தேன்.

கதவின் மீது கை வைத்தவன் திடுக்கிட்டேன்.

உள்ளே — பத்மினி மேசை மீது சாய்ந்தவாறு அழுதுகொண்டிருந்தாள். இலேசாக விசும்பல் ஒலி வந்துகொண்டிருந்தது.

எனக்குக் கோபம் உண்டாகிவிட்டது நான் சொன்ன ஒரு வார்த்தைக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறாளே, இவள்.

கதவைப் படாரென்று திறந்துக்கொண்டு உள்ளே போனேன். "பத்மினி இது என்ன ஆபீசா ! இல்லை, உங்கள் வீடா ? ஆபீசென்றால் பலவும் இருக்கத்தான் செய்யும் இதற்காக நீலிக் கண்ணீர் வடிப்பது சரியல்ல. இருக்க இஷ்டமில்லையென்றால் தாராளமாகப் போகலாம்" என்று கோபத்தோடு கூறிவிட்டு வெளியேறினேன்.

மறுநாள் பத்மினி அலுவலகத்திற்கு வரவில்லை. நான் எதிர்பார்த்ததுதான். ஆனால், நான் எதிர்பார்த்தபடி விலகல் கடிதம் வரவில்லை. சரி, பார்க்கலாம் என்று பேசாதிருந்தேன்.

அன்று ஏனோ எனக்கு வேலையே ஓடவில்லை. பத்மினியின் வேலையை வேறொரு ஆள் கவனித்தாலும் எனக்கு என்னவோபோல் இருந்தது. எதையோ இழந்துவிட்டதுபோல் இருந்தது.

அவளுடைய அறைக்குள் சென்றேன். எல்லாப் பொருள்களும் ஒழுங்காக இருந்தன. தட்டெழுத்துப் பொறி, மைக்கூடு, மேசை எல்லாம் சரியாக இருந்தன. இது என்ன மேசையின் கீழே ஒரு கடிதம் ?

எடுத்தேன். கையால் கிறுக்கப்பட்ட ஒரு கடிதம் அது !

படித்தேன்; இல்லை, படிக்கிறேன்.

'நான், நான் - ஏன் இந்தப் பிறவி எடுத்தேன் ? அதுவும் பெண்ணாக, பேரெழில் கொண்டவளாக ஏன் பிறந்தேன் ? என் பெயரின் பின்னால் இருக்கும் பி. ஏ. பட்டம் கிடைக்க, அப்பப்பா - என்னபாடுபட்டிருப்பேன். பிறருக்குப் பட்டம் பெறப் படிப்பது ஒன்றுதான் துன்பம் எனக்கு ? கைகள் ஓடாக மாடுபோல் உழைத்து, இரத்தத்தை வியர்வையாக்கி வாயைக் கட்டி வயிறைக் கட்டி என்னைப் படிக்க வைத்தாள் என் அன்னை. இரத்தம், வியர்வை, உழைப்பு, பசி, உறக்கமின்மை, வசதியின்மை, வறுமை எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன என் பி. ஏ. பட்டத்தின் பின்னால். பணம் படைத்தவர்கள் ஒரு பொழுது போக்கிற்காகவும், நடுத்தர குடும்பத்தினர் வேலைக்காகவும் படிக்கின்றனர்; பட்டம் பெறுகின்றனர். அப்படியல்ல என் பட்டமும், படிப்பும். சரிவர உடுக்கக்கூட உடையிருக்காது ! அப்படியே குனிந்ததலையுடன் கல்லூரிக்குச் செல்வேன். உண்பதைப்பற்றி உரைக்க வேண்டுமா ? எப்படியோ படித்தேன்.

அப்பா ! நீங்கள் எங்களை தவிக்க விட்டுவிட்டு போய்விட்டீர்கள் ! நீங்கள் சென்றதும் உங்களுடன் எல்லாம் போய்விட்டன. நானும், அன்னையும் சின்னத்தம்பியும்தான் சிறுமைப்பட்டுச் சீரழிவதற்கு மிஞ்சினோம்.

வேலைக்குப் போட்ட விண்ணங்களெல்லாம் வீணாயின. கடைசியில் இங்கு, எப்படியோ எனக்கு வேலை கிடைத்தது. இனி நம் தொல்லை தீர்ந்தது, துயரம் தொலைந்தது என்றிருந்தேன் ஆனால்...?

வயதான தாயும், வயது வந்த நானும், படிக்கும் தம்பியும் அமைதியாக வாழ இந்த வேலை வழி செய்தது ! ஆனால் ?

நான் செய்த தவறு ! அதுவும் 'டைப்' அடிக்கையில் செய்த தவறு ! அதற்கு அவர் இப்படி என்னைத் திட்டிருக்கக்கூடாது !

அவர் ! ஒரு புரியாத புதிர் ! வேறு யாராகிலும் அவ்வண்ணம் என்னைத் திட்டியிருந்தால் வேறு விதமாக ஆகியிருக்கும். அப்பொழுதே கால் கடுதாசி எழுதி முகத்தில் வீசிவிட்டு வந்திருப்பேன் !

ஆனால் அவர் ! நான் கேரளத்தைச் சேர்ந்தவளானாலும், எனது தாய் மொழி மலையாளமென்றாலும் தமிழனாகிய அவர் மீது...?

சே ! என்னைத் திட்டிய அவரை இனி பார்க்கக்கூடாது ! முடிவு... விலகல்தான் !"

இப்படி எழுதியிருந்தது அக்கடிதத்தில் அக்கடிதத்தைப் படிக்கும்போது எனக்கு மனம் 'பக்' 'பக்' கென்று அடித்துக்கொண்டது. அவள் மீது எனக்கு அனுதாபம் பிறந்தது ! சே ! என்ன மிருகத்தனமாக நடந்துகொண்டோம் என்று வருந்தினேன் ! என் ஆத்திரத்தை எண்ணி நானே வெட்கப்பட்டேன் ! அனுதாபம் பின்...!

அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு என் அறைக்கு வந்தேன். என்ன செய்வது என்று யோசித்தேன்.

பின் — என் கார் அவள் வீடு நோக்கி ஓடியது. சிறிது தூரத்தில் நிறுத்திவிட்டு நான் அவள் வீட்டு வாசற்படியருகில் சென்றேன்.

கதவைத் தட்டக் கையெடுத்த பொழுது - உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. அந்த ஆள் குரல் பழக்கப்பட்டது போலிருந்தது.

— 8-ம் பக்கம் —

"தென்றல்"
ஆகஸ்ட் 22-ந் தேதி இதழில்
தொடர்கிறது
கண்ணதாசன்
எழுதும்
"ஊமையன் கோட்டை"
(தொடர் கதை)

தொல்காப்பியச் சுவை

7. பொருளதிகாரத்துள் பொருளியல்

★ இராம. இராமநாதன், பி. ஏ. (ஆனர்ஸ்.) ★

தொல்காப்பியத்தின் மூன்றும் பிரிவின் பெயரே பொருளதிகாரம்; அவ்வாறிருக்க 'பொருளியல்' என்ற பிரிவு ஏன்? என்று எண்ணுதல் இயல்பு. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியர் கருத்து. எனவே, பொருளியல் என்பது முன்னர் கூறிய அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு ஆகிய நான்கு இயல்களில் வரும் பொருள்களையும்; பின்னர் கூறப்போகும் நான்கு இயல்களில் வரும் பொருள்களையும், அனைத்திலும் விடுபட்ட பொருள்களையும் அடக்கிப் பொருளைக் கூறுவதால் இப்பெயர் கொடுத்தார். இதனை 'ஒழிபியல்' என்றும் கூறுவர்.

தொல்காப்பியர் செய்திகளைக் கூறுமிடத்துக் கோவையாக, தெளிவுடன் மனத்தில் பதியுமாறு கூறும் இயல்பினர். இதனாற்றான் இவரை உள நூலாசிரியர் என்றேன். பொருளியலின் முதற் சூத்திரமே 'செய்யுளியலிற்கு' ஒட்டியது. தலைவன் தலைவியர் களவுக் காலத்திலோ, கற்புக் காலத்திலோ பிரிந்திருத்தல் கூடும் - அவ்வேளைகளில் அத்துயருற்றோர் என் செய்வர்? தம் துயரைப் பிறரிடம் பேசமுடியாது; ஆனாலும் பேச வேண்டும். பேசினால் தான் அமைதி. பேசுதற்குத் துணையாக, பறவை - மரம் - கடல் - கானம் அமையுமாம் இவையிடத்தே தலைவி தன் துயர் கூறி, 'அவரை அழைத்து வா' என்று வேண்டுவாளாம். நாவலர் பாரதியார் அவர்கள் தம் "மாரிவாயில்" என்ற நூலுள், மேகத்தைத் தூதாக அனுப்பி மறு மொழியுடன் திரும்பச் செய்கிறார். இது ஒரு காட்டாகும்.

கற்பு - களவு ஆகிய இயல்களில் வேறு முறைகளில் இருவர்க்கு மட்டுமே விளக்கிய செய்திகள் நால்வர்க்கும் உண்டு என்று இங்குக் கூறுகிறார். "பால்கெழு கிளவி" அதாவது உறவு காரணமாக, பாசம் காரணமாக ஒன்றனைத் தன் மகள், மகவு, தலைவன் என்று கூறுதல் உண்டு. இது தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் ஆகியோருக்குக் கூறப்பட்டது.

அடுத்துக் காணும் அரிய செய்தி ஒன்றுண்டு - உயிர் - பெறற்கு அரிது; நாணம் - விடாமற் காப்பது வேண்டும்; மடன் - இருத்தல் இன்றியமையாதது. இவை குற்றமற்றோர் இடம்தான் இருக்கமுடியும். அவர்கள் தலைவி - தோழி - நற்றாய் - செவிலி ஆவர். இவர்கள் நால்வரும் உடலால் வேறுபட்டாலும் உயிரால் ஒருவரே ஆவர். ஆனால் தலைவிக்குத் தனி உரிமைகளை முன்னரே தந்துவிட்டார் தொல்காப்பியர். அச்சம், மடம், நாணம் இம்மூன்றும் தலைவன் முன் • சில வேளைகளில் மட்டும் இழக்கப் பெறலாம் - தவறில்லை - ஆனால் திரும்பப் பெற்றுவிடுதல் வேண்டும் என்கிறார்.

தலைவியும் தலைவனும் எதிர்ப்படும்பொழுது முதலில் தலைவன்தான் பேசுதல் வேண்டும் என்பது தொல்காப்பிய விதி. ஆனால் இன்றைய வழக்கில் தலைவியையும் பேசுமாறு செய்கிறார்கள். காட்டு: பாரதிதாசன் மன்னன் மகள் முதலிற் பேசியதாகத் தம் நூலுள் காட்டுகிறார். இதுதான் சிறந்த முறையாக இன்று மதிக்கப்படுகிறது. காரணம் காதலிற் சிறந்தவர், உயர்ந்தவர் 'பெண்' பாலார் ஆகும். எனவே உயர்வுடையவர் பேசினால் சிறப்பாகும்.

தலைவன், தலைவிக்குத் தெரியாமல் சில கூடா ஒழுக்கங்களில் ஈடுபடுவதுண்டு. அவ்வேளைகளில் தோழி, பாங்கன், பார்ப்பார் முதலியோர் மூலமாகத் தலைவி இதனை அறிய முயலுவாள். சில வேளை 'பொய்' கூறித் தலைவனிடம் உண்மையைப் பெற்றுத் திருத்துவதும் உண்டு.

களவுக் காலத்திலே தலைவி தலைவன் உறவு முறை பிறர் அறியலாகாத ஒன்றாகும். அவ்வாறு அறியப்பட்டால் அது அலராகிப் பின் தூற்றத் தொடங்குவர். எனவே இவர் தம் உறவு மிகவும் அருமையானது. ஆனால் இவ்வுறவைத் தோழிமட்டும் அறிவாள். அவ்வுறவு வளரவும் துணையாக இருப்பாள். தலைவன் தலைவியை மணம் முடிக்காமல் களவு மேலே ஆசை கொண்டால், தலைவியே வருந்தித் தோழியிடம் கூறுவாள். கூறிய பின்னர் தான் தோழி இச்செய்தியைத் தன் தாயிடம் கூறி மண ஏற்பாடுகளைச் செய்வாளாம். இது ஒருவரையறைக்கு உட்பட்டு வாழும் பண்பாடுடைய இனத்திலேதான் காணக் கூடிய நிகழ்ச்சி ஆகும்.

பொருளியல் என்ற பொதுப் பெயர் கொண்டதாற்றான் தொல்லாசிரியர் தலைவியும் அவரைச் சார்ந்தோரையுமே பேசியவர், பெண்ணினத்தையும் பார்க்கிறார். பெண்களுக்கு அன்றும் - இன்றும் - என்றும் வேண்டிய பண்புகள் ஆறு மட்டும் கூறுகிறார். இந்த ஆறு கொண்டோர் எந்த ஆற்றையும் (வழியையும்) ஊறுபாடின்றிக் கடக்கலாம் என்பேன். பெண்ணினம் மென்மையுடையது; அன்புடையது ஆனால் பொறுமையும் இல்லை என்று கூற முடியுமா? தொல்காப்பியர் பெண்கட்கு வேண்டும் என்கிறார். என்ன?

1. **அடக்கம்** வேண்டும். எதில்? உடை அணிவதிலே, நடையிலே, நாவிலே, பார்வையிலே அடக்கம் வேண்டும்.

2. **நிறைவு** வேண்டும். எதில்? தான் பெற்ற இன்பத்தில், வாழ்வு பெற்ற இடத்தில், வருவாய்க்கேற்ற வாழ்வில் (நிறைவு) மன அமைதி வேண்டும்.

3. **செம்மை** வேண்டும். மனத்திலே தனக்கு - மற்றவருக்கு என்று வேறுபாடு கொள்ளாது நேர்மையுடன் செயல்புரிய, சொல் கூற வேண்டும்.

4. **செப்பு** வேண்டும். யாரிடத்தில், எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்றறிந்து, பேசுவோரின் மனம் புண்படாமல் அன்புச் சொல்லால் மகிழ்வித்தல் வேண்டும்.

5 **அறிவு** வேண்டும். இல்லாதது வேண்டும் என்று இல்லை. அறிவை அறிவோடு உறவுகொள்ளச் செய்ய வேண்டும். ஆடவனுக்கு முன்னால் அவன் பேசுகையில் இடையிலே பேசாது இருத்தல் அறிவுடைமையாகும். தேவையற்ற இடத்தில் சோர்வான சொற்களைச் சொல்லுதல் அறிவின்மை அல்லவா? சொல்வனவும், செய்வனவும் அறிவுக்கு வேலை தரும் அறிவுச் செயல்களாக இருந்தால் நன்மை பயக்கும்.

6. இறுதியில் **அருமை** வேண்டும் என்றார். அருமை என்றால் என்ன? ஆங்கிலத்தில் Secret என்றால் 'அறிதல் அருமை' என்று கூறலாம். இன்றும் நாளையும் வேண்டும், வேண்டும் என்று விழையும் பண்பு இது ஒன்றுதான். அதை எண்ணிப் போலும் அன்றே "அருமை"யை இறுதிக் கண் வைத்தார். எதையும் மறைத்து வைக்கக்கூடிய செய்திகளை, அருமறைகளை, கணவன் காதோடு கூறிய அரிய செய்திகளைத் தன் மகளிடம்கூடக் கூறுதல் கூடாது. "அருமை" இல்லாவிட்டால் பெண்ணினம் அருமையான இனம் என்று பெயர் பெறாது. எனவே மறைவான செய்திகளை மறைத்து வாழ்வதும் வேண்டும். அந்த "அருமை" பெண்கட்கு வேண்டும் என்றார். ஆண்கட்கு அருமை உண்டு என்பதால் பெண்கட்கு வேண்டும் என்று கூறுவோரும் உண்டு.

புத்தம் புதிய சத்தான கருத்துக்களைத் தருவோர் சான்றோர் ஆவர். உலகியலில் வழங்கி வரும் கருத்துக்கள் வழக்கியல் ஆகும். இவ்விரண்டு கருத்துக்களும் இலக்கியத்தில் அறமுடன் பயின்று வரலாம் என்கிறார் ஆனால் "மேடம் பவாரி", "அன்னா கரினா" போன்ற இன்று காணப் பெறும் நூல்களின் நிலை என்ன? என்றால்

"அறக்கழி வுடையன
பொருட்பயன் வரினே
வழக்கென வழங்கலும்
பழித்த தென்ப"

—தொல் - 214

என்று புறனடை தருகிறார். பொருள் காரணமாக அறம் இல்லாத செயல்கள் வருமானால் அதனை வழக்கு என்று கொள்ளலாம் என்றார்.

"இன்பம்" என்பது எல்லாச் செயலிலும், எல்லா இனங்கட்கும் உண்டு வேறுபாடு என்பதே இல்லை. ஆனால் "புணர்ச்சி இன்பம்" என்பது இதனின்று புதியதாகும் எல்லா உயிர் இனங்கட்கும் பொதுவான தொன்றாகும். இந்த இன்பம் (உயிர்த் தத்துவம்) உயிர்க் கொள்கை எனில் உண்மையே. இவ்வின்பம் பெறுதற்கு அடிப்படை எது என்றால் "மனம்" என்றார். மணம் புரிந்தோர் அனைவரும் இன்பம் பெறுவார் என்ற உறுதியோ, மணம் புரியாத-மங்கை மாட்டு இன்பம் பெறார் என்ற வரையறையோ தவறாகும். திருமணம் செய்துகொண்டாலும் மனம் - ஆண் பெண் இருவரது மனமும் ஒன்றுபட்டால் தான் இந்த இயற்கை இன்பம் உண்டு என்கிறார். அவ்வாறு பலர் அறிய மணம் பெறாத இருவர் மனம் ஒன்றுபட்டால் மகிழ்ச்சி அளவிறந்தது என்பதையே,

"எல்லா உயிர்க்கும்
இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம்
மேவற் றாகும்"

—தொல் - 219.

என்ற சூத்திரத்தால் சொல்கிறார்.

தலைவன் தலைவியிடம் பணிய வேண்டும் என்பார். புலவிக் காலத்தில் தலைவியிடம் பணிதல் தலைவன் இன்பத்திற்கு ஒரு முறை என்கிறார். ஆனால் எப்போதும் பணியத் தொடங்கினால் அங்கு ஆண்மை செயலற்றுப் போகிறது. எப்போதும் தப்பாது பணிவு காட்டி வாழுதல் மெல்லியலார்க்கே, தலைவிக்கே இயல்புடையது. 'பணியமாட்டோம், விடுதலை வேண்டும்' என்று இன்று கல்லூரிகளில் கூறினாலும், வீட்டு வாயிலினுள் அடி எடுத்து வைத்த பின் பணிவதால் பெறும் இன்பம் அளவிறந்தது என்பதை அறிவர். இளமை இரத்த ஓட்டம் அளவு முறைகளை - வரையறைகளைப் பார்ப்பதில்லை, வாழ்க்கைப் படகில் செல்லும்போதுதான் விளைவு - சுழிவுகள் புலப்படும்; ஆண் - பெண் உரிமை விட்டுக் கொடுக்கும் குணம் முதலியவை தெரியவரும்.

பின்னர் சில உரிமைகளைப்பற்றியும் பேசுகிறார். தலைவியும் தலைவனும் ஒருவரை ஒருவர் உயர்த்திக் கூறலாம். ஆனால் ஐயப்படுகின்ற செயல் தலைவனுக்கு மட்டும்தான். தலைவி இயல்பாக உள்ள மென்மை காரணமாக ஐயப்படத் தொடங்கிவிட்டால் பின் ஒவ்வொரு செயலுக்கும் வழக்காடு மன்றம் ஏற வேண்டியதுதான். எனவேதான் போலும் - தலைமகள் ஐயம் கொள்ளக்கூடாது என்கிறார். தலைவனிடம் நல்ல நம்பிக்கை வைத்து வாழ்வியலை நடத்தவேண்டும் என்கிறார்.

வாழ்க்கை செம்மையுற, சிறப்புற இரு வேறு பாலாரும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்பதும், உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்தாது இளகிய உள்ளம் பெற்று இருவரும் மனம் ஒன்றி வாழ்ந்தால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைக்கலாம் என்பதும் பொருளியல் கூறும் பேருண்மைகளாகும். ★

அடுத்த கிழமை...
"உவமச் சிறப்பு"

★ ★ ★

முயலைக் கொன்ற வேலைவிட களிறின்மேல் எறியப்பட்டுத் தவறிய வேலுக்குத் தனி மதிப்பு. யானை வீழாவிடினும், மறவன் யானைமீது வீசியதனால் பெருமை கிளைக்கிறது. கறையற்ற வீரத்தின் இலட்சணத்தை வள்ளுவர் படம் பிடிக்கும் வகை இது. அதே வழியில் ''நான் மாண்டாலும் கவலையில்லை!'' என்று மரணப்படுக்கையை மலர்ப்படுக்கையாக்கிக்கொள்ளும் வீரன் ஒருவனைக் காண்கிறோம். ஆம்! அத்துணை வீரம் செறிந்த அவன் தோள்தான்..

ஐயமங்கை முத்தமிட்ட தோள்

இலக்கியங்கள் எழுதுவதும் பேசுவதும் ஒரு வேளை கற்பனைக் குவியலாகவே இருக்கலாம். ஆனால் வாழ்க்கையின் சாயலாகிலும் அதில் படாவிட்டால், அவ்வளவு சுவையிருப்பதில்லை. இலக்கியத் தூரிகை ஏந்தியவன் எதைப் படைக்கிறானோ அதோடு நாம் ஒன்றி விடுகிறோம். அதுதான் இலக்கியப் படைப்பின் வெற்றி!

திண்டோளைப்பற்றி ஆயிரம் புலவர்கள் எழுதியதைப் படித்திருக்கிறோம். அவற்றை வைத்துக்கொண்டு நான் தேடிப் பார்த்ததில் யாரும் தட்டுப்படவில்லை என்றேன். அப்படியானால் அவ்வளவு உணர்ச்சிகளை ஊட்டிய பாடல்களையாகிலும் மறுபடியும் படித்தின்புறக் கருதுகிறேன். அடர்ந்தெழுந்து ஒலிக்கின்ற இடிக்கூட்டம்போல், பகைமேல் சீறி விரைகின்ற அந்த மானமறவர்களைப் பற்றிய பாடல்கள் மிகச் சுவையுடையன. கலிங்கத்துப் பரணியில் வரும் போர்க் காட்சிகளைப் படிக்கையில் நம் தோளும் ''ஓரங்குல''மாகிலும் உயரவில்லையா? புறப் பொருள் வெண்பா மாலை வகுக்கும் வீர இலக்கணம் நம்மை ஒரு கவர்ச்சியில் தள்ளவில்லையா? புறநானூற்றின் 400 பாடல்களும் இன்றும் புதிய உயிரோவியங்களாய்க் காட்சியளிக்கின்றனவே - அது புலவனின் பெருமைதானே! ஏதோ, அங்கும் இங்குமாக அவ்வப்போது சில பலர் வளமான வாழ்வாலும் முறையான பயிற்சியாலும் உடலை மலைபோன்று வைத்திருந்திருக்கலாம். அவர்களால் இந்நாட்டுக்குப் பயன் கிடைத்திருக்கிறது. அவர்களது குருதியும் உயிரும் இந்த மண்ணின் உயர்வுக்குப் பயன்பட்டிருக்கின்றன. வீரம்கொதிக்கும் அத்தகைய வாழ்வைப் பெற்றோரின் தோளில்தான் வெற்றிச் செல்வி முத்தமிடுகிறாளாம்! ஆம்! அந்தத் தோளைத்தான் ஐயமங்கை முத்தமிட்ட தோள் என்கின்றனர். வாழ்வுக்கும் ஓய்வுக்கும் போராடுகின்ற மனித வர்க்கத்திடை சற்று அமைதி ஊட்டுகின்ற இத்தகைய இலக்கிய மறவர்களின் ஒருவன் தோளில் ஐயமங்கை பதித்த முத்திரையின்சத்தைச் சுவையுங்கள்.

★

போர்க்களத்தின் கொடுமை எழுதிமாள்வதல்ல. ''முன்வைத்த தாளைப் பின்வாங்கேன்!'' என உறுதியுடன் புறப்பட்டோர் சிலர், பிடரியில் அதே கால்பட ஓடி வருவதுண்டு. ''காதலி குடிகொண்டிருக்கும் நெஞ்சையா, கடுங்களத்திற்குப் பலி தருவது?'' என்று தம் இதயத்தைப் பத்திரமாகப் பாதுகாத்துக்கொண்டு திரும்பிய அடல் மார்பர்களையும் அறிவோம். தமிழனின் வீரமோ இவற்றிற்கு மாறுபட்டது. குருதி ஆறெனக் கொப்பளித்தோடும் களக்காட்டை விளையாட்டுத் திடலாக்கிக்கொண்டோர் நம் தமிழ்மண்ணினர். பொங்கழல் விழிகளும், முழவார்க்கும் வெடிப்பேச்சும் அந்தத் தமிழ்வீரனின் சொத்துக்கள். அவன் களம் நோக்கிச் சென்றான்.

வாழ்வின் சகல சுவைகளையும் ருசித்துவிட்ட முதுமையன்று அவன் பருவம். காதல் சுகத்தின் ஏடுகளை ஒவ்வொன்றாக, அன்றுதான் படிக்கின்ற வயது. அவன் வயது.

பெண்டு பிள்ளையற்ற தனிக்கட்டையுமல்ல அவன்; கருத்திற்கிசைந்த மனைவியொடு இல்லறத்தின் பெருமையைக் கண்டுகொண்டிருந்தவன் அவன்.

கட்டையிலே போகவேண்டிய காலமல்ல; கட்டிலிலே பயில வேண்டிய பருவம் எனினும் கட்டளை பிறந்துவிட்டது காவலனிடமிருந்தது.

மலைக்குகை நீங்கிய புலிப்போத்துக்கள் ஆர்த்தெழுவதுபோல அணிவகுத்துக் கிளம்பிய மானமறவரணியில் அவனும் ஒருவன்! அவனுக்கென்று அந்த அணியில் எந்தத் தனிப் பெருமையும் கிடையாது. அவன் மற்றையோரைப் போன்று நூற்றில் - ஆயிரத்தில் ஒருவனே! முரசுகள் முழங்கின; கொடிகள் அசைந்தன; போர் தொடங்கிவிட்டது!

மலையோடு மலைமோதியதுபோல், இடியோடு இடி அறைந்துகொள்வதென, பேரொலி கிளம்பிற்று. இது போதும் போர் உச்சக்கட்டத்திற்குச் சென்றுவிட்டதென்பதைத்தெரிவிக்க.

இருதரப்பு மன்னரும் களத்தில் குதித்துவிட்டனர்.

தினவெடுத்திருந்த தோள்கள் சில, வாள்களை முத்தமிட்டன; சில குதிரைக்குளம்புகளைத் தாங்கின. ஆனால்..

மானங்காக்கும் போரில் முதல் பலியானாலும், பெருமையுடன் பங்குகொண்ட அவன் வாளைச் சுழற்றினான்; வேலை எறிந்தான்; காற்றென விரைந்து களிறெனச் சாடித் திரிந்தான். ''பகையணியின் ஒரு படைவீரனுக்கே இவ்வளவு வலிவா?'' என அத்துணைபேரும் வியந்து அதிர்ந்தனர். அவனையே குறித்துப் பலரை ஏவினர்.

வாளொடு வாள் மோதின; வேலொடு வேல் தாக்கின. அவனோடு எவனெனனோ தாக்கினர்! அப்படியும் பயன் ஒன்றுமில்லை என்றதும் மதகளிறை ஏவினர்.

வேழத்தின் இயல்பே அச்சமானது. அதிலும் போர்க்களத்திற்குக் கொண்டு வரப்படுவதால், முன்பாகவே அதற்கு மது வேறு ஊட்டியிருக்கின்றனர். என்னவாகும் நிலை? மதவெறி கொண்டு தறிகெட்டோடுகிறது வேழம். கன்ன மதத்தையும் கபோல மதத்தையும் பீசமதத்தையும்விட, களிறுக்குக் கள்ளுண்டு வரும் வெறிமதம் கொடுமையானது. அத்தகுவேழத்தை ஏவினர்.

கரைபுரண்டோடி வரும் காட்டாறு போல் அது ஓடிவந்தது. நிலைகுலைந்தோடினர், நெஞ்சுரமற்றோர். நம் வீரனோ, நின்ற நிலையிலிருந்து அகலவில்லை, அயரவில்லை. மலையென ஓடிவரும் களிறின்முன், தானும் ஒரு மலையாய் நின்றான். ''அஞ்சிக்கெடு; உயிரைவிடு; அன்றேல் ஓடிவிடு!'' என்பதுபோல் மிரட்டிவரும்யானையின் முன்னே நின்றான். பெருமரத்தைக் கூட வேரோடு பறித்து தூளோடு தூளாக்கும்வேழத்தின்முன்வேலொடு நின்றான். கை நீட்டி வரும் அதன் மேல் வேலை எறிந்தான். அதற்கும் சினம் பொங்கிற்று; வேலையெறிந்துவிட்ட இவனைக் குறி வைத்துத் தாக்க ஓடி வந்தது

அதன் உருவமே மலை. இவன் நெஞ்சத் துணிவுதான் மலையளவு இருந்தும். கடைசிவரைப் போரிட்டு அது கீழே விழுந்த அதே நேரத்தில்தான் அவனும் கீழே விழுந்தான். கீழே விழுந்த களிறு கையையும் கால்களையும் ஆட்டிக்கொண்டிருந்தது. அவனது உயிரும் இன்னும் சிறிது நேரந்தான் நிலைக்கும்...

உடம்பெல்லாம் இரத்த நீராடிக் கிடந்தாலும் அவன் தளரவில்லை.

தொண்டனது உள்ளம் மரணப் படுக்கையில்கூட எதையாகிலும் செய்துகொண்டேயிருக்கும் தூய மறவனது அறுந்து விழும் கைகளும் வீரகாவியங்கள் எழுதத் தவறா.

உடல் சிதைந்து விழுந்தபோதிலும் அவன் இதயம், துடிப்பை - ஆற்றலை யிழக்கவில்லை! அணுவுக்கணு சூடேற்றும் மற நிகழ்ச்சிகளை ஒன்றன்பின்னொன்றாய்ப் படைக்கின்றது. விழுப் புண்பட்ட அம்மறவனின் உடல் தரையிலே விழுந்தாலும் தளரவில்லை. அவன் அழுது புரண்டலறினால் மனதின் தொல்லை தீர்ந்திடலாம். ஆனால் மானம் வாழாது. வரலாற்றில் வாழும் மான உணர்வு அவனை ஊக்கியது; சீறினான்.

படுத்த நிலையிலேயே தன் கையில் கிடைத்த கருவிகளைப் பகைக் குலத்தின் மேல் வீசினான். அவர்கள் திகைத்தனர். படைக் கருவிகள் பல இவ்வளவு விரைவாய் எங்கிருந்து வருகின்றன என்று!

பகை மன்னனுக்கும் விந்தையாய்ப் பட்டது. அங்குமிங்கும் அலைந்து தலை வேட்டையாடிக்கொண்டிருந்த அவன் விழிகளில் பட்டான், வீரன். கிடந்த கிடையில் அவன் காட்டும் திறமும் தீரமும் அந்த அரசனின் நெஞ்சைக் கலக்கின. நடுங்கினான். அரசன் தன்னைக் கவனிப்பதை மறவன் உணர்ந்தான்; சீறினான்.

முன்னர் அவன் காட்டிய மரத்தைக் கண்ட மன்னன், ''இவனன்றோ புலவர் பாடும் புகழுடையவன்; நீள் நிலம் வணங்கும் திறனுடையவன்!'' என அஞ்சிப பேதுற்றவாறு நிற்கிறான்.

அடலேறு மகிழ்ந்தான், தன் வீரத்துக்குத்தக்க பரிசு கிடைத்துவிட்டதென்று. எடுத்த வேலை எறிந்தான் பகை மன்னன் மீது. காற்றைக் கடந்து சென்ற வேல் காவலன் நெஞ்சையும் கடந்துவிட்டது. முடிசார்ந்த புரவலன் உடல் மண்ணை முத்தமிட்டது. விழுப்புண் வலியினையும் கருதாது ஆர்த்து மகிழ்ந்தான் நம் அடலேறு.

★

இப்படிப்பட்டவன் - எடுத்த செயலை முடித்தவன் - பகையை மடித்தவன் தம்மவன் எனின் யாருக்குத்தான் பெருமையிருக்காது? ஆம் இவ்வளவு நிகழ்ச்சியையும் சொல்ல வந்தவளே ஒரு பெண்தான். ''என் கணவன் எங்கே என்று கேட்கின்றீர்? அதோ, அப்போரினிலே கீழே விழுந்தும் தளராது போரிட்டு மாற்றானை மாய்த்தவன்தான், என் கணவன்! அவனை அடைந்ததைவிட இப்போது பெரு மகிழ்வெய்துகிறேன்!'' என்று அவனைப்பற்றிய விவரம் கூறினாளாம் அவள்.

★

பாலைவனங்களிலே ஒட்டகக் கூட்டங்கள் செல்வதை இன்றும் வேடிக்கையாகப் பார்ப்போருண்டு. இன்றும் நாட்டுப்புறங்களிலேயிருந்து நள்ளிரவில் பார வண்டிகள் ஒரு தொடராய்ச் செல்வதைப் பார்த்திருப்பீர். அவைபோல் தமிழகத்தின் பழைய நெய்தல் நிலச் சிற்றூர்களிலே உப்பு வண்டிகள் செல்வது ஓர் அழகிய காட்சி. வரிசையாக, மாடுகளின் கழுத்து மணி அசைய அசைய செல்வதே தனியழகு அப்படிக் கரடுமுரடான பாதைகளில் வண்டி இழுத்துச் செல்லும் அக்காளைகள் எங்காகிலும் விழுந்துவிடின் அது அத்தோடு சரி. நோயுற்ற அம்மாட்டை அப்படியே போட்டுவிட்டுப் போய்விடுவர். அது விழுந்த இடத்தின் பக்கத்திலே கிடக்கும் புல்பூண்டு நீர்தான் - ஏதேனும் இருப்பின் - அதற்கு உணவு. அப்படி அரைகுறையாய் வாடி வாடி அதுமாள வேண்டியதுதான்.

★

கைவிடப்பட்ட யாட்டின் நிலையிலே கிடந்த அந்த மாவீரனின் உயிர் நில்லாதுபோயிருக்கலாம். ஆனாலும் அவன் எடுத்துக்கொண்ட இலட்சியம் வென்றுவிட்டதன்றோ! ஆமாம், அவன் தோளிலே ஐயமங்கை - வெற்றிச்செல்வி முத்தமிட்டுவிட்டாள்! அது ஒன்றே போதும் அவன் புகழை, தலைமுறை தலைமுறைக்குச் சொல்ல!

ஆசாகு எந்தை
  யாண்டுளன் கொல்லோ
குன்றத் தன்ன
  களிற்றொடு பட்டோன்
வம்பலன் போலத்
  தோன்றும் உதுக்காண்
வேனல் வரி அணில்
  வாலத் தன்ன
கான ஊகின்
  கழன்றுகு முதுவீ
அரியல் வான் குழல்
  சுரியல் தங்க
நீரும் புல்லும்
  ஈயாது உமணர்
யாருப் இல் ஒருசிறை
  முடத்தொடு துறந்த
வாழா வான்பகடு
  ஏய்ப்பத் தெறுவர்
பேருயிர் கொள்ளும்
  மாதோ அதுகண்டு
வெஞ்சின யானை
  வேந்தனும் இக்களத்து
எஞ்சலில் சிறந்தது
  பிறிதொன்று இல்லெனப்
பண்கொளற்கு அருமை
  நோக்கி
நெஞ்சற வீழ்ந்த
  புரைமை யோனே.

—புறநானூறு 307-ம் பாடல்.

-செல்லையா.

ஆகஸ்ட் 21-ல் வெளிவருகிறது!

"இன முழக்கம்"

(வார ஏடு)

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

4, இராசகோபால் நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை :: சென்னை-2.

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

கதவைத் தட்ட எடுத்த கையைத் தாழ்த்தினேன். "என்ன இருந்தாலும் மிஸ் பத்மினி நீங்கள் செய்தது சரியில்லை. அந்த மேனேஜர் மடையன் உங்களை கன்னு பின்னுவென்று திட்டினான்—இல்லையா? அதற்கு அவனைச் சும்மா விடக்கூடாது. இது பற்றி மேலதிகாரிகளுக்கு ஒரு கம்ப்ளெயிண்ட் அனுப்பனும்" என்றது அக்குரல். ஆம் சந்தேகமே இல்லை. அது அலுவலகத்தில் காதல் லீலையைச் செய்து என்னால் ஒரு கிழமை விலக்கி வைக்கப்பட்டவனின் குரல்தான்.

அதோ அவள் பேசுகிருள்: "இல்லீங்க. தப்பு என்னுடையது தான்."

"என்ன தப்பு? மகாதப்பு! நீங்க மாத்திரம் உங்க கைப்பட ஒரு கம்ப்ளெயிண்ட் லெட்டர் எழுதி கொடுங்க. மற்றதை நான் பார்த்துக்கறேன்."

"வேண்டாம். வேண்டாம். என்னால் முடியாது. தயவு செய்து நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொள்ளுங்கள். அவர் திட்டியதில் தவறேதுமில்லை. ஆனால், நான் என் குமுறலைக் கடிதத்தில் வெளியிட்டு வீட்டு வந்தேன். அது அவர் கையில் சிக்கியதோ, இலலையோ? உம், பார்க்கலாம்."

"கடிதம் வேறு எழுதி வைத்திருந்தீர்களா? சரி, சரி; எனக்கென்ன வந்தது. நான் வர்றேன்".

அவன் வருகிருன் போலும்! நான் வந்த வழியே திருப்பினேன்.

★

என் கார் அலுவலகத்தினின்று வீடு திரும்பிக்கொண்டிருந்தது. என் அருகில் பத்மினி அமர்ந்திருந்தாள்!

"எனக்குத் தெரியும் இப்படி நடக்குமென்று"

"எப்படி?" என்றேன்.

"நான் எழுதிய விலகல் கடிதத்தை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று" என்ருள் பத்மினி.

"எப்படி தெரியும் உனக்கு?"

"உங்கள்முகத்தைநான் பார்க்கும் போதே தெரிந்துகொண்டேன்."

"பேசமாட்டாயா நீ. அலுவலகத்தினின்று உன்னை விரட்டி என் வீட்டில் அல்லவா சேர்த்துக் கொள்ளப்போகிறேன். அது சரி. என்னை உனக்கு முதலிலேயே பிடித்திருந்ததா?"

"பேட்டியிலேயே தங்களை நான் வரித்துக் கொண்டேனே! முதல் பார்வையே என்னைக் கவர்ந்து விட்டது!"

"அப்படியென்ருல் ஏன் என்னிடம் பேச அவ்வளவு வெட்கப்படுவாய்."

"கூச்சம்தான் காரணம் ஆமாம். நீங்கள்...

"நானு? உன் பேரெழில் என் மனதில் பதித்துவிட்டது. உன் கவர்ச்சி, ஒயில், அழகுநடை, நல்ல உடை எல்லாம் நீ எனக்கேற்றவள், நீ எனக்கேற்றவள் என்று பறை சாற்றிக் கொண்டிருந்தன. உன் பெருந்தன்மையும், அடக்கமும் என்னை மிகமிக கவர்ந்துவிட்டன. ஆனால்..."

"என்ன?"

"நீ மலையாளத்து மங்கை. பொதுவாக மலையாளத்துப் பெண்கள் மற்ற மொழிக்காரர்களை அவ்வளவு விரும்ப மாட்டார்கள் என்பார்கள். அந்த ஐயம் எனக்கு."

"ஐயம் போய்விட்டதா? மொழி வேறு என்ருலும் நாமெல்லோரும் ஒரே இனம்தானே!"

"ஆம்! நாம் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்தானே? என்ன கேரள ரோஜா!"

"உண்மை என் தமிழ் ராஜா!"

"நல்ல காலம் கூஜா என்று சொல்லாமல் போனயே!" என்று சொல்லிவிட்டு சிரித்தேன். அவளும் சிரித்தாள். சிரித்தபடி எங்கள் வாழ்வுப்படியில் கால் வைத்தோம்.

— இரா மதனகோபால்,
பி. கார்.

செப்டம்பர் முதல் வெளிவருகிறது!

"தமிழரசி"

[புதுமைத் தமிழ் மாத ஏடு]

ஆசிரியர்: மா. வீ. இளந்தமிழன்

கோவையிலே இதுகாறும் மேற்கொள்ளாத் தனி முயற்சி!
தெள்ளுதமிழ் அள்ளிவரும் தேனாறு!
ஒன்பான் சுவைநல்கும் ஒப்பற்ற ஏடு!
பத்திரிகை உலகில் ஒரு செயற்கை நிலா!
முன்னணி எழுத்தாளர்கள் எழுதுகின்றனர்!

தனி இதழ் 25 காசு.

எங்கும் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு:—
"தமிழரசி", 229, இடையர் வீதி, கோயமுத்தூர்-1.

பிள்ளை விடு தூது!

[சிற்றிலக்கியத் தலைவியர் கிள்ளை, மயில், குயில், பூவை, மேகம், தென்றல் முதலியவற்றை, காதலனுக்குத் தூது விடுவர். இது இலக்கிய மரபு. கீழ்வரும் பாடலின் தலைவி, கணவனிடம் சென்றுவர மதலைமொழிப் பிள்ளையைத் தூதனுப்புகிருள். அத்தலைவனை நீங்கள் கண்டாலும் சொல்லுங்கள், இங்குள்ள இவள் நிலையை! —ஆ-ர்.]

தேன்போலும் தீஞ்சொல் தினம்பேசும் என் மகனே
மான்போலும் பேரழகி மாதாதன்– என்றன்பாய்
தந்தை இடத்துரைப்பாய் தக்கபடி பேசிடுவாய்
விந்தையென எண்ணேன் விரும்பிடுவேன்- சிந்தை
துயரோங்கச் சேய்நாடு சென்றுள்ளா ராளன்
அயர்வின்றித் தேடிடுவார் செல்வம்- பயலேநீ
செல்வத்துள் செல்வம் நமையன்றி வேறெதுவும்
இல்லையெனச் சொல்லிடுவாய் இப்போதே– நல்வாழ்க்கை
ஏதென்று தோன்ருமல் எங்கோ உறைந்துள்ளார்
மாதென்றும் பாராமற் போயுள்ளார்- தாதுகமழ்
பூங்கொத்தைக் காலால் புதைக்கும் மதவேழப்
பாங்குதனைக் கைக்கொண்டார் பற்றின்றி- ஈங்கவரால்
சாயாத துன்பம் தொடர்ந்தே நுழைவதனுல்
ஓயாத என் மனமும் ஓய்ந்துவிடும்- தாயாள்நான்
உன்னைத் தொழுதிடுவேன் உத்தமனே நீஎனக்குச்
சின்னவ னுயினுநான் சேவிப்பேன்-என்பால்
மழலைச்சொல் பேசிடுவாய் மாவின்பம் ஈவாய்
முழவுச்சொல் ஆர்ப்பாய் முகிழ்ப்பாய்- இழைதுன்பைத்
தந்திரத்தால் நீக்கும் தமியனே உன்சிரிப்பு
மந்திரத்தால் வாழ்வுதரும் மாண்புடையோய்– செந்தமிழர்
பிள்ளையென இங்கே பிறந்ததனுல் என்நெஞ்சில்
கொள்ளை மகிழ்வுறையும் கோகிலமே– கள்ளமிலா
உன்வதனம் தான்கண்டும் ஊர்சென்ற உன்தந்தை
என்எண்ணிச் சென்ருரோ ஏங்குகிறேன்- கன்மனத்தார்
வேற்றுப்பெண் போட்ட பெருவலையிற் சிக்கியதால்
மாற்று மனத்தாராய் மாறினரோ- ஆற்றவொணுப்
பிழை இதுவென்று பேராளா நீசொல்லி
ஏழை துயர்களைவாய் என்றென்றும்- வாழ்வுதரும்
பிள்ளைக் கனியமுதே பேசும் பெருமானே
அள்ளி உனை அணைப்பேன் அன்புருவே- தள்ளி
எனைச்சிறையிற் போட்டார் இடும்பை விளைத்தார்
மனைவாழ்வுப் பேரின்பம் மாய்த்தார்- நினைத்தேநான்
பார்க்கின்றேன் ஆர்க்கின்றேன் பாவியுளம் வாடிடவே
வேர்க்கின்றேன் ஏதும் வினையறியேன்- ஈர்க்கின்ற
ஆடகத்து மின்சிலையே ஆயுளெலாம் உன்தந்தை
வாடவிடும் நாடகத்தைப் பாராய்நீ- வீடகத்தே
இன்பம் தழைக்காம லென்றென்றும் நின்றுறையும்
துன்பமழை வேண்டாங்காண் தூமணியே- அன்புடையோர்
நொந்து மடிந்துவிழும் நோய்வாழ்வை நீக்கிடநீ
முந்திடுவாய் நாளும் முயன்றிடுவாய்- சிந்தும்
பவழச் சிரிப்பதனில் பாகைத் தெளிப்பாய்
தவழும் மதிமுகத்துத் தாமரையே- ஆவலினுல்
பிள்ளைத் தமிழ்கூறும் பேர்பெற்ற நூல்களெலாம்
அள்ளி உனை அணைக்கும் ஆக்கத்தை- விள்ள
இயலாதே எந்நாளும் என்னுள்ளக் காட்டில்
மயில்போலும் ஆடிடுவாய் மாண்பாய்- பயில்கதையும்
உன்னைப் புகழும் உரைகேட்டேன் ஆதலினுல்
நின்னைப் புகழ நினைத்தேன்நான்– நன்மகனே
தந்தைக்கு ஞானம் தறுதலையாய்த் தானுரைத்த
கந்தன் உனதறிவிற் காலேகாண்- விந்தைநீ
பேசாமல் உன்விழியால் பேருற்ற தந்தையுளம்
கூசும் படிச்செய்வாய் கோமானே- ஏசாமல்
அன்னுரை ஈர்த்திடுவாய் ஆக்கம் மிகஈவாய்
சொன்னபடி போக்கிடுவாய் துன்பெல்லாம்- கண்ணுல்
உருக்கும் திறமுடையாய் ஒண்சிரிப்புப் பேச்சால்
மறுக்காதே தூதுசொல்லி வா!

★ தமிழ்ப்பித்தன் ★

சாவில் இன்பம்!

மனிதனுடைய வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி ஏற்பட்டாலும், அவன் பெரும்பாலான நாட்களில் துன்பம் என்னும் சுமையைத் தாங்க வேண்டியவனாகிறான். மானிட ஜீவனுள்ள உலகின் எந்த மூலை முடுக்கை எடுத்துக்கொண்டாலும் இந்த உண்மை ஒரு மாபெரும் சமுதாயக் கருத்தாகக் கருதப்படுகிறது. நாட்டிற்காக உடல் உயிர் ஈந்த நல்லவர்கள், பிறர் வாழத் தன் வாழ்வைப் பட்ட மரமாக்கிக்கொண்ட பகுத்தறிவு வாதிகள், சாக்கடையிலே கிடந்த சமுதாயத்தை சந்தனத்திற்கு இழுத்து வந்த சமுதாய சீர்திருத்த வீரர்கள். இதயத்து வீணையை இலக்கியத்து ஏட்டின் மூலம் எழுப்பிய ஏந்தல்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்பு மூலம் விழி பொருத்தி நல்வழி காட்டிய விற்பன்னர்கள் - இவர்கள் அத்தனை பேரும் தங்கள் சுயசரிதங்களைச் சோகச்சித்திரங்களாகத் தீட்டியிருக்கின்றனர். சித்திரத்தின் ஓரத்தில் உள்ள நிழல் கோடுபோல அவர்களது வாழ்க்கையிலே இன்ப ஒளி சிறிதளவு வீசியிருக்கிறது. கண்ணீரும் கம்பலையுமாகவே தங்கள் வாழ்நாளை எழுதிக்கொண்ட கர்ம வீரர்கள் தொகைதான் அதிகமென்று நமக்கு வரலாறு கூறுகிறது எனவேதான் இலக்கியப் படைப்புக்களிலும் மனிதனுடைய சோக வரலாற்றைப் பாடுபவை தலைசிறந்தனவாக இன்றும் மதிக்கப்படுகின்றன.

"மனிதனுடைய வாழ்க்கைச் சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டினால் அவன் இன்பத்தை அனுபவித்ததைவிடத் துன்பத்தில் பங்குகொண்டது அதிகமாகக் காணப்படுகிறது" என்று ஆங்கில இலக்கிய அறிஞன் டாக்டர் ஜான்சன் கூறினான். ஆண்டாண்டு காலமாகக் கவிஞர்களும் கலைஞர்களும் சிற்பிகளும் சோக முத்திரைகளையே தங்கள் கலைகளில் பதித்து வருகிறார்கள். "இந்த உலகில் நீ ஏன் பிறந்தாய்?" என்ற கேள்விக்கு "நான் பிறருடைய துன்பத்தைக் கேட்கவும் என்னுடைய துன்பத்தைக் கண்டு அவன் கண்ணீர் வடிக்கவும் தான் நான் இவ்வுலகில் பிறவி எடுத்தேன்" என்று கவிஞன் கீட்ஸ் கூறுகிறான். "மனிதர்கள் பிறப்பது ஒருவர் சோக கீதத்தை மற்றவர் கேட்பதற்காகத்தான்" என்று அழுத்தமாக கூறுகிறான் கீட்ஸ். நாவலாசிரியன் தாமஸ் ஹார்டி உதவி பெறமுடியாத பரிதாபத்திற்குரிய வாயில்லாதஜீவன்களாக மனிதர்களைத் தன்னுடைய நாவல்களிலே உருவாக்குகிறான். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் இருள்சூழ்ந்த மாளிகையாக-ஒளியில்லாத விழிகளாகத்தான் மாத்யூ ஆர்னல்ட் கண்களுக்குத் தென்படுகின்றன. புரட்சிக்கவிஞன் ஷெல்லி இந்தக் கருத்துக்களைத்தான் அழகுபட "நமது சோகமான நினைவுகள் தான் இனிமையான கவிதைகள்" என்று கூறுகிறான் பலமொழி இலக்கியங்களையும் கற்றுணர்ந்தவர்கள் ஷெல்லியின் கூற்று எத்தகையதொரு சிறந்த கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறது என்பதை உணர்கிறார்கள். இலக்கிய மேதை ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களைச் சிறிது பார்ப்போம் ஷேக்ஸ்பியர் துன்பியல், இன்பியல் ஆக இருவகைப்பட்ட நாடகங்களையும் எழுதி இருக்கிறார். ஆனால் அவரின் துன்பியல் நாடகங்கள் மக்கள் மத்தியிலே பெற்றிருக்கின்ற செல்வாக்கை அவரது இன்பியல் நாடகங்கள் பெற முடியவில்லை. ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களான 'ஹாம்லட்' 'மாக்பத்' இரண்டும் அன்றிலிருந்து இன்றுவரை தலைசிறந்த சிருஷ்டிகளாகப் போற்றப்படுகின்றன. இலக்கிய உலகிலே 'ஹாம்லட்' பெற்றிருக்கிற செல்வாக்கை அவருடைய இன்பியல் நாடகமான "நீ விரும்பியபடியே" பெற முடியவில்லை. அவருடைய 'லீயர் மன்னன்' என்ற நாடகத்தில் தன்னுடைய இரு புதல்விகளின் நன்றி கெட்ட தன்மையைக் கண்டு லீயர் மன்னன் உருகும்பொழுது ஷேக்ஸ்பியர் தன்னுடைய சோக வரலாற்றை - அனுபவத்தை அப்படியே கற்றோர் கதறும்படி அல்லவா எழுதி வைத்திருக்கிறார். ஷேக்ஸ்பியருடைய துன்பியல் நாடகங்களில் வருகின்ற கதாநாயகர்களான ஜூலியஸ்சீசர், ஹாம்லட், ஒத்தெல்லோ, மாக்பத் லீயர் இவர்கள் மக்கள் மனதிலும் இலக்கிய உலகிலும் பெற்றிருக்கின்ற மதிப்பை அவரது இன்பியல் நாடகங்களில் வருகின்ற கதா நாயகர்களான பக், பால்ஸ்டாப், கோபோ முதலியவர்களால் பெறமுடியவில்லை. ஷேக்ஸ்பியர் தோன்றிய பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் இலக்கிய உலகில் சோக மயமான காவியங்களுக்கும் கவிதைகளுக்கும்தான் மதிப்பும் பெருமையும் இருந்திருக்கின்றன. பண்டைக் கிரேக்கத்தில்கூட துன்பியல் நாடகங்களுக்குத்தான் அதிக மதிப்பு இருந்திருக்கிறது 'துன்பியல் நாடகங்கள்தான் மனிதனுடைய உன்னதமான பரிசுத்தமான உயர்ந்த எண்ணங்களை பிரதிபலிக்கக்கூடியவை" என்று அரசியல் அறிஞர்கள் பிளேட்டோவும் அரிஸ்ட்டாட்டிலும் கருதுகிறார்கள். இன்பமான முடிவைவிடச் சோகமான முடிவுதான் மக்கள் மனதில் ஒரு கொந்தளிப்பை - கிளர்ச்சியை ஏற்படுத்தவல்லது என்று கருதித்தான் சாப்ஹாக்கில்ஸ் என்ற கிரேக்க நாடகாசிரியன் தன்னுடைய கருத்துக்களை துன்பியல நாடகங்களின் மூலம் எடுத்துரைத்தான். எந்தத் துறையிலும் சோகமயமான படைப்புக்களுக்குத் தனி ஒரு மதிப்பு இருந்து வருகிறதே - அது ஏன்? ஒரு குழந்தை பிறந்தவுடன் அடைகின்ற மகிழ்ச்சியைவிடப்பன்மடங்கு துன்பங்களை அந்தக் குழந்தை இறந்தபோது அடைகிறாள் ஒருதாய். உடன் பிறந்தவர்களின் இறப்பையோ பெற்றோரின் மறைவையோ ஒருவனால் தாங்கிக்கொள்ளமுடியாது. இதன் அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்தால் கேள்விக்கு விடை தானாகக் கிடைத்துவிடும். மனிதன் தன்னுடைய வாழ்நாள் முழுவதையுமே மகிழ்ச்சியாக - இன்பமாக கழிக்க விரும்புகிறான். "நேற்று போய்விட்டது. நாளை நம் உயிர் நம் உடலில் தங்குமா என்று நமக்குத் தெரியாது. எனவே இன்றே எல்லா இன்பத்தையும் அனுபவிப்போம்" என்று பாடினான் கவிஞன் உமர் கயாம். இந்தத் தத்துவத்தை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகிறார்கள். துன்பமில்லாத இன்பகரமான வாழ்க்கையே எனது குறிக்கோள் என ஒவ்வொரு மனிதனும் கூக்குரலிடுகிறான். ஆனால் அவன் தன் குறிக்கோளில் வெற்றி பெறுகிறானா என்றால் அன்றிலிருந்து இன்றுவரை இல்லை என்ற பதில்தான் கொடுக்கப்படுகிறது அவனது குறிக்கோளைத்தகர்த்தெறிய ஆயிரக்கணக்கான துன்பங்கள், இடர்கள். பசி எடுத்தவன் கண்களுக்குச் சோறு கிடைக்கவில்லை என்றால் காலில் முள் குத்தியதுகூடக்கடும்புலியின் வாயில் சிக்கியது போன்ற ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தும். குறிக்கோளை அடையமுடியாத மனிதனின் பாதையில் குறுக்கிடும் இன்னல்கள்-இடர்கள் மாபெரும் துன்பக்கோட்டைகளாக, துயரத்தின் சின்னங்களாகத் தென்படுகின்றன. எனவேதான் அவைகளை பிரமாதப்படுத்தி எழுதிக் குவித்துவிடுகிறான். ஆனாலும் மனிதனுடைய நரம்புகளைச் சுண்டி இழுக்கும் தன்மை சோகப் படைப்புக்களுக்கு இருப்பதற்கு முக்கியக் காரணம் மனித குலத்திற்கே பொதுவான இளகிய மனமும் துன்பத்தைக் கண்டு தூர விலகும் தன்மையுமேயாகும் துன்பத்தை வராமல் தடுப்பதைவிட அதை வரவேற்று, பின் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதில் தான் இன்பம் அடங்கியிருக்கிறது" என்று ஆங்கிலக் கவிஞன் மில்டன் கூறுகிறான். இன்பத்தின் மூலம் நாம் கண்டுகொள்ளும் கருத்து என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மை படைத்தது அல்ல. ஆனால் இன்னல்கள் மூலம் நாம் அடையும் வெற்றி காலத்தால் அழியாத கருத்தாக உலகில் நிலைத்து நிற்கும். அனுபவித்த அல்லல்களை ஏட்டிலே படிக்கும்பொழுதும் திரையிலே பார்க்கும்பொழுதும் நமது உணர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. ஏனென்றால் நம்முடைய வாழ்க்கையில் அவையெல்லாம் ஆறாத வடுக்கள்; சாகாத தத்துவங்கள். "இன்பத்தை அனுபவித்துக் கிடைக்கும் மகிழ்ச்சியைவிட இன்ப நினைவுகளின் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சி சிறந்தது. துன்ப நினைவுகளைவிட அதை அனுபவித்துக் காணுதல்மூலம் கிடைக்கும் பலன் பெரியது" என்று கூறினான் கவிஞன் லார்ட் பைரன். உலக முழுதும் தன் காலடியில் போட்டு வெற்றிக்குரல் எழுப்பிய அலெக்ஸாண்டர்கூட துன்பத்தின் சாயலைப் புது உருவத்தில் கண்டானும். இன்னும் தன் காலடியில் போட்டு நசுக்குவதற்கு இன்னுமொரு உலகம் இல்லையே என்று கவலைப்பட்டானும் மாவீரன் அலெக்சாண்டர். "ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும் தாழ்ச்சியும்" என்ற மாபெரும் சரித்திர ஏட்டைத் தீட்டினான் கிப்பன் என்ற வரலாற்றாசிரியன். சட்டத்தை - ஒழுங்கை உலகிற்கு அளித்தது ரோம் கீர்த்தியும் கித்தாப்பும் பேரும் புகழும் கொண்டு பல ஆண்டுகள் வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டு மகிழ்ந்தது ரோம். அந்த ரோமப் பேரரசின் வீழ்ச்சி ஒரு பயங்கர தொடர் கதையைத் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கிறது. அந்தத் தொடர் கதையை, "அரசு வீழ்ந்துவிட்டதன் காரணத்தை" ஆராயப் பல ஆண்டுகள் புத்தகங்கள் பல படித்து ஆராய்ச்சிகள் பல செய்து துன்பத்தையும் வறுமையையும் பொறுத்துக் கொண்டு தன் சரித்திரப்புத்தகத்தை வெளியிட்டான் கிப்பன். ஆராய்ச்சிக்காகப் பல ஆண்டுகள் அவன் பட்ட துன்பத்தின் பயனை இன்று நாமெல்லாம் அனுபவிக்கிறோம். துன்பமில்லையேல் இன்பம் இல்லை. சோகமில்லையேல் இனிமையில்லை. "என் சாவின் பயனாக இனிமையான பல இன்னிசை கீதங்கள் என் கல்லறையிலிருந்து கிளம்பும். அதைத்தான் நான் விரும்புகிறேன்" என்ற கவிஞன் ஷெல்லியின் கூற்றை உண்மையென விளக்குகிறது மேற்கண்ட சான்று.

-பெஸ்கி, பி. ஏ.

தமிழில் ஒரு புதுமை!

மா. கி. தசரதன் எம். ஏ.

எழுதிய

"தணலில் தங்கம்"

விற்பனை உரிமை:

"தென்றல்", சென்னை-6.

தனிப் பிரதி ரூ. 1-50.

தபால் செலவுடன் ரூ. 1-60.

விற்பனையாளருக்குக் கழிவு 20%.

தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

சங்கடத்தில் மகிழ்ச்சி!

மனிதனும் மிருகமும்

ஆறறிவுடையவன் மனிதன். இது எல்லோரும் அறிந்த உண்மை. அவன் பெற்றிருக்கும் ஆருவது அறிவே அவனை விலங்குகளினின்றும் மாறுபட்டவனுக ஆக்குகிறது. கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தில் இருந்து, அணு-நீர்வளிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்படும் இந்நாள் வரைக்கும் மனிதனுக்கு உறுதுணையாய் நிற்பது அந்த ஆருவது அறிவே!

விலங்குகளுக்கு இயற்கை பல ஆற்றலைக் கொடுத்துள்ளது. ஆனல் மனிதன் அந்த ஆற்றல் எல்லாவற்றையும்விட மாபெரும் ஆற்றலான உய்த்துணரும் அறிவைப் பெற்றுள்ளான். இல்லையென்ருல், மனிதனைக் காட்டிலும் பன்மடங்கு பேராற்றலும், பேருருவமும் கொண்ட விலங்குகளை மனிதன் ஆட்டிப்படைத்திருக்க முடியாது. மூளையைப் பயன்படுத்தி மனிதன் தனக்குச் சாதகமாகச் செய்துகொண்ட தற்காப்பு வசதிகள் எண்ணற்றவை. வன விலங்குகளிடமிருந்து தப்புவதற்கு இரவில் நெருப்பை மூட்டினுன்; பேரொலியைப் பெரிய தோற்கருவிகளின் மூலம் எழுப்பி மிருகங்களை மிரண்டோடச் செய்தான்.

அறிவைப் பொறுத்த மட்டில் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள தொலை அளக்க இயலாதது. விளக்கமாகச் சொன்னல், விலங்குகளிலேயே உயர்ந்ததாகிய குரங்குகளுக்கும் மனிதர்களில் மட்ட அறிவு உடைய பைத்தியங்களுக்குமே அறிவில் பெரும் தூரம் உள்ளது!

மனிதன் ஒரு பொருளைப்பற்றி அறிந்துகொள்ளும் முறையும், விலங்குகள் அறிந்துகொள்ளும் முறையும் வெவ்வேருனவை.

மனிதன் பழங்கால அனுபவங்களை நினைவில் வைத்துக்கொள்ளுகிருன். அவன் ஏதாவது செய்ய முற்படும்போது, "இதைச் செய்வதால் ஏற்படும் விளைவு என்ன?" என்று சிந்திக்கிருன். தனக்கு, முன்னர் அத்துறையில் ஏற்பட்டுள்ள அனுபவங்களையும்; பிறருக்கு ஏற்பட்ட இன்ப துன்பங்களையும் கருத்தில் கொண்டு செயலாற்ற முந்துகிருன். ஆனல் விலங்கு அப்படி இல்லை. பழங்கால அனுபவங்களை அதனல் மனத்தில் இருத்த முடிவதில்லை. பன்முறை அடுத்தடுத்து அனுபவங்கள் ஏற்பட்டாலன்றி மற்ற எதையும் விலங்கினல் நினைத்தும் பார்க்க இயலாது

துப்பாக்கியால் ஒருவன் சிங்கத்தைச் சுட வருகிருன் என்று வைத்துக்கொள்வோம். சிங்கம் இதற்குமுன்னர் இதுபோன்று நடந்த நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்காது. "ஏதோ ஒன்று முன் நோக்கி நீண்டு உள்ளது. அந்த நீண்ட மிருகத்தால் நமக்குத் துன்பமே விளையும்" என்று கருதுகிறது. நாம் ஏதாவது சிறு கட்டையை நீட்டித் துப்பாக்கியால் சுடுவதைப்போல் மரத்தின் மேல் நின்று பாசாங்கு செய்தாலும் போதும். சிங்கம் ஓடிவிடும்.

ஆனல் மனிதன் அப்படி இல்லை. ஒருவன் திருடச் செல்கிருன் என்ருல், அவன் திருடும்போது பிடிபட்டால் என்ன நடக்கும் என்பதை அறிந்திருக்கிருன். பிறர் திருடியதால் பட்ட இன்பதுன்பங்களையும் ஞாபகம் வைத்திருக்கிருன். ஆனலும், பின்னல் எது விளைந்தாலும் அனுபவிக்கத் தன்னை ஆயத்தம் செய்துகொண்டு திருடச் செல்லுகிருன். அதே நேரத்தில் இறைச்சி விற்குமிடம் செல்லும் நாயை எத்தனை தடவை அடித்துத் துரத்தினலும் தான் அனுபவித்ததை மறந்து அதே இடத்திற்குத் தான் போகும்.

உலகம் முதன் முதலில் தோன்றிய பொழுது மனிதர்கள் இல்லை என்பது முடிவான செய்தி. முதலில் புல் பூண்டு, மரம் செடி கொடிகள், பிறகு ஓரறிவுயிர், ஈரறிவுயிர் - இப்படியாக இறுதியில் மனிதன் தோன்றினுன். ஆகையால் மிருகங்களின் உணர்ச்சிகள் ஓரளவு மனித வாழ்க்கையிலும் காணப்படுகின்றன.

சில சமயம் கோபத்தால் தன் மகனை அடிக்கும் தந்தையைப் பார்த்து, "என்ன மிருகத்தனமாக அடிக்கிருர்" என்று நாம் கூறக் கேட்டில்லையா! "எருமை உடம்படா உன் உடம்பு" என்று கூறக்கேள்விப் பட்டில்லையா அல்லது நாமேதான் கூறியதில்லையா? நண்பர்கள் ஒருவரை ஒருவர் நகைச்சுவையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது "அந்தக் குரங்கு வேலையை இன்னும் விடவில்லையே" என்று இடையில் வருகிறதல்லவா? இவை எல்லாம் மேலே கூறிய கூற்றைத் தானே நிரூபிக்கின்றன!

இவ்வுண்மையை வைத்துத்தான் உளநூல் அறிஞர்கள் (Psychologists) தங்கள் நூலில் விலங்குகளுக்கென்று (Animal Psychology) ஒரு துறையை ஏற்படுத்தி உள்ளனர். அதன்கீழ், பல்வேறு மிருகங்களையும் ஆராய்ந்து முடிவுகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மிருகம் ஒரு பொருளைப் பற்றி அறிவதற்கும் மனிதன் அறிந்துகொள்ளுவதற்கும் வேற்றுமை உள்ளதென்று முன்னரே கூறியுள்ளேன். இது நன்ருக ஆராய்ந்து அறியப்பட்ட உண்மை. மேனுட்டு உளநூல் அறிஞர்கள் இத்துறையில் பெரும் ஆராய்ச்சிகள் செய்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் 'தாண்டைக்' (Thorndike) 'கொஹ்லர்' (Kohler) என்ற இருவரும் ஆவர்.

தாண்டை என்பவர் "**தவறும் - திருந்துதலும்** (Trial and error) என்ற முறையில், எல்லோரும் கற்கின்றனர்" என்ருர். அதாவது "ஒரு உண்மையைக் கண்டறிய முற்படும்போது பல குற்றங்கள் செய்ய நேரிடும். ஆனல், அதையே பன்முறை செய்யும்போது தவறுகள் ஒவ்வொரு முறையிலும் குறைகின்றன. இறுதியில் ஒரு தடவை விடையைக் கண்டறிகிருேம்" என்பதுதான் இக்கொள்கையின் விளக்கம்.

ஒரு சிறுவன் தமிழ் கற்கிருன் என்று வைத்துக்கொண்டால் முதலில் அவன் செய்யும் தவறுகள் எவ்வளவோ இருக்கும். எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளும்போது 'க' எழுது என்ருல் 'ச' எழுதுவான். பிறகு 'ஏற்றம்' எழுது என்ருல் 'ஏட்றம்' என்று போடுவான். அடுத்து, சந்திப் பிழைகள் எவ்வளவோ இருக்கும். லகர ளகர மருட்சி தொல்லை கொடுக்கும். மெய் வரிமுன் வருதல், குறில்நெடில் முன்பின்னய் அறிதல் போன்ற தவறுகள் சர்வ சாதாரணம். இவைகள் அனைத்தும் எத்தனையோ முறைகளுக்குப் பின்தான் திருத்தப்படுகின்றன இல்லையா?

கணக்கை எடுத்துக்கொண்டால் எவ்வளவோ தவறுகள் திருத்தப்படுவது நமக்குத் தெரியும். வகுக்கும் எண், வகுபடும் எண் தெரியாத மாணவர்கள் இல்லை என்று கூறிவிட முடியாது. ஒருவன் செய்த கணக்கில் 'ஈவு' சரியாக இருக்கும், கணக்கு சரியாக இருக்காது. இப்படி எவ்வளவோ!

ஆகவே, தவறும் - திருந்துதலும் முறையில் மனிதன் கற்கிருன் என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார் தாண்டைக். அதற்கு ஒரு நிரூபணமும் நடத்திக் காண்பித்தார் அவர்.

உளநூல் வாதிகள் மனிதனுக்கும் விலங்குக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்று நினைப்பவர்கள் அல்லவா? ஆகவே அவர்கள் நிரூபணம் செய்வதற்கு குரங்கோ, நாயோ, பூனையோதான் அகப்படும். அதற்கு நம் தாண்டைக்கும் விலக்கல்லவே! எனவே அவரும் ஒரு பூனையை எடுத்துக்கொண்டார்:

"ஒரு உயரமான சுற்றுச் சுவர் (Compound) அதற்கு ஒரே ஒரு வழி. ஒரு பசியுள்ள பூனையை அதனுள் விட்டார் தாண்டைக். சில மணி நேரம் கழித்து ஒரு மீன் துண்டும் ஒரு தட்டில் பாலும் கதவின் எதிரே வைக்கப்பட்டது இதைப் பார்த்தது பூனை. அதன் நாக்கில் நீர் சுரக்க ஆரம்பித்தது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. எனவே எப்படியும் அதை அடைய வேண்டும் என்று கதவின் இடுக்கு வழியே தலையை உந்திற்று. சந்திலே பூனையின் தலை பிடிக்கவில்லை. எனவே வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்க சுவரோரமாக ஓட ஆரம்பித்தது. ஒரு சுற்று சுற்றியானதும் மறுபடியும் கதவை இடித்தது திறக்கவில்லை. மறுபடியும் சுற்ற ஆரம்பித்தது. ஒன்று... இரண்டு...மூன்று...சுற்றி ஒரு பலனுமில்லை. சுவரைத் தாண்ட முயன்றது பூனை ஆனல் சுவரோ உயமாயிருந்தது. பாவம் பூனை மீண்டும் கதவருகே வந்தது மீண்டும் மீண்டும் கதவை முட்டியது. இடுக்கின் வழியே உடலைத் தள்ளிற்று. ஆனல் திறந்தபாடில்லை. பூனைக்கு உணவைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் தாளவில்லை கதவைத் தாண்ட ஆரம்பித்தது. ஒன்று... இரண்டு... எட்டு...டனுல்...கதவை இணைத்த வளையம் அந்தண்டை விழுந்தது. கதவு திறந்துகொண்டது, பூனைக்கு மண்டையில் நல்ல அடி. இரும்பு வளையம் (Latch) பட்டால் நோகாதா? பூனை வலியைக்கூடப் பார்க்கவில்லை. நேரே உணவை நோக்கி ஓடியது"

இதே சோதனையை மறுமுறையும் செய்தார். மனிதனுப் இருந்தால் நேரே கதவருகே சென்று வளையத்தைத் தள்ளிக் கதவைத் திறந்திருப்பான். பூனைக்கு அவ்வளவு அறிவு இல்லை. மறுபடியும் சுவரைச் சுற்றத் தொடங்கியது. ஆனல் சுற்றும் எண்ணைக் குறைத்துக் கொண்டது.

பலமுறை இதைத் தொடர்ந்து செய்தார் தாண்டைக். ஒருமுறை பூனை நேரே கதவருகே சென்று ஒரு தடவை உயர எழும்பி வளையத்தைத் தள்ளியது. இதைக் குறித்து "பல முறை தவறுகள் இழைத்தது பூனை. அத்தவறுகளும் குறைந்து கொண்டே வந்தன. இறுதியில் பூனை வெற்றியடைந்துவிட்டது" என்ருர் தாண்டைக்.

இதற்கு மாருகக் கொஹிலர் என்ற மற்றொரு அறிஞர் ஒரு தத்துவத்தை உலகின் முன்வைத்தார். அதாவது, "நாம் பன்முறை தவறிழைத்து ஒரு முறை கற்கிருேம் என்பது தவறு. நன்ருகத் தெளிந்து கற்கிருேம் என்பதுதான் சரி" என்பது அவர் கொள்கை. அதையே உள்ளாராய்வு Insight என்ருர் அவர். இதை நிரூபிக்க அவர் ஓர் ஆய்வு நடத்தினுர்:

"இருப்புக்கூண்டு ஒன்றனுள் குரங்கு Chimpanzee ஒன்றுவிடப்பட்டது. கூண்டின் கம்பிகளுக்கு இடையே உள்ள தூரம் குரங்கின் கை தாராளமாய் நுழையும்படி அமைக்கப்பட்டிருந்தது அக்கூண்டிற்குள் இரண்டு கழிகள் வைக்கப்பட்டன. ஒரு கழியின் துவாரத்தில் மற்றொரு கழியின் கூர்முனையைப் பொருத்தினல் ஒரு நீண்ட கழி நமக்குக் கிடைக்கும். அந்தக் கழியைச் சேர்த்து வைக்காமல் பிரித்து வைத்திருந்தார் கொஹிலர். கூண்டின் எதிரே ஒரு பழம் (Banana) வைக்கப்பட்டது. இரண்டு கழிகளையும் சேர்த்து நீட்டினல் எட்டும் தூரத்தில் இருந்தது பழம். குரங்கு கைகளையும் கால்களையும் நீட்டிப் பார்த்தது. எடுக்கமுடியவில்லை. சோர்ந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்து இரண்டு கழிகளுடனும் விளையாடிக்கொண்டிருந்தது. திடீரென்று, ஏதோ விளையாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் இரண்டு கழிகளும் ஒன்று கூடிவிட்டன. குரங்கு அந்த நீண்டக் கழியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தது. நேரே கூண்டுக் கம்பிகளண்டை ஓடிற்று. கழியை வெளியே நீட்டிப் பழத்தை இழுத்தது. கூண்டருகே வந்தவுடன் கையை நீட்டி எடுத்துக் கொண்டது."

குரங்கு, இரண்டு கழிகளும் ஒன்று சேர்ந்தவுடன் உற்றுப் பார்த்ததே, அப்போது அதன் மூளையில் உதித்த மாற்றமே அது பழத்தை அடையக் காரணம். இதுதான் உள்ளாராய்வு என்ருர் கொஹிலர்.

"என்முறைதான் சிறந்தது. தாண்டைக் கொள்கை தவருனது. இவ்வளவு பெரிய உண்மை நிரூபணத்திற்குச் சாதாரண பூனையை வைத்திருக்கக்கூடாது" என்று வாதிட்டார் கொஹிலர். "உயர் அறிவு உடைய மனிதன்கூடத் தன் அறிவை உபயோகிக்க அவசியம் நேராத நிலையில் தாண்டைக் முறையைத்தான் பின்பற்றுவான். அதனல் தவறும் - திருந்துதலும் முறையில் கற்ருன் என்று ஆகிவிடாது"

"ஓர் அறை அதற்கு ஒரே ஒரு வழி அறையினுள் இருக்கும் மின் விசையை அழுத்தினல்தான் கதவு திறக்கும். இப்படிப்பட்ட ஓர் அறையில் ஒரு மனிதனை அடைத்தால் அவன் தாண்டைக் முறையில்தான் தப்பிக்கமுடியும். ஏனெனில் அறிவைப் பயன்படுத்த அங்கே அவசியம் எழவில்லை அவனுக்கு. ஏதாவது தப்பிக்க வழி உளளதா என்று சுவரையும், தரையையும் தடவிப்பார்ப்பான். அவன் இருக்கும் நிலையில் ஒரு சிறு கல் கிடைத்தால் கூட 'அது தப்பிக்கும் வழிக்கான குறியோ?' என்று ஐயுறுவான். அப்படிப்பட்ட மனநிலையில் அவன் கையில் மின் - பொத்தான் அகப்பட்டால் அழுத்தித்தான் பார்ப்பான். இதனல் அவன் தாண்டைக் முறையில் கற்பதாகப் பொருள்படாது." என்ருர் கொஹிலர்.

இவ்விரு கொள்கைகளுக்கும் அந்நாளில் மோதல் ஏற்பட்டது. ஆனல் தீர ஆலோசித்தபின் அறிஞர்கள் குழு இரண்டு முறைகளும் சரி என்று ஒத்துக்கொண்டது. அதாவது "மட்ட அறிவுள்ள பிராணிகள், 'தவறும்-திருந்துதலும்' முறையில் கற்கின்றன. மனிதர்களும், குரங்குகள் போன்ற உயர் அறிவுள்ள பிராணிகளும் 'உள்ளாராய்வு' முறையில் கற்கின்றன" என்பது. ★

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறுர்.

து. இளம்வழுதி, சேலம்.

காளையார்கோவில் என்பது என்ன? அது எங்கே உள்ளது? என்ன சிறப்புப்பெற்றது?

சிவகெங்கைக்குச் சுமார் பதினைந்து கல் அளவு தூரத்தில் உள்ள ஊரே காளையார்கோவில். மேற்படிப் பெயரில் ஒரு கோவிலிருப்பதால் ஊரும் அப்பெயரிட்டு வழங்கப்படுகிறது. சங்க காலந்தொட்டு இவ்வூர் இருந்து வருகிறது. சங்க இலக்கியங்களில் கானப்பேரெயில் என வழங்கப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமேல் இது பெருங்கோட்டையாக இருந்து வந்திருக்கிறது. கி. பி. 1800-ம் ஆண்டிலேகூட இதன் கோட்டையைச் சுற்றியிருந்த நெருக்கமான பெருங்காட்டை யழிப்பதற்கு வெள்ளையர்கள் வெகு தொல்லைப்பட்டார்கள். பாண்டிய நாட்டிலேயே மிகப் பயங்கரமான கோட்டையென்று கருதப்பட்டது காளையார்கோவில் கோட்டைதான். தனி ஓர் அரசகுலமே இதனைத் தொடர்ந்து ஆண்டு வந்தது. மதுரைப்பாண்டியர்கள் இதைப் பிடிப்பதற்கு வெகு பாடுபட்டனர். அந்த முயற்சியில் வெற்றிபெற்ற ஒரு பாண்டியன் தன் பெயருக்கு முன்னுல் "கானப்பேரெயில் கடந்தவன்" என்று பட்டம் சூட்டிக்கொண்டான். கி. பி. 17, 18-ம் நூற்றுண்டுகளில் மறவர் சமுதாயம் இதனை ஆண்டு வந்தது. காளையார்கோவில் கோபுரங்களில் ஒன்று, கி. பி. ஏழாம் நூற்றுண்டில் சுந்தரபாண்டியனுல் கட்டப்பெற்றது என்று கூறப்படுகின்றது. மற்றொரு பெரிய கோபுரம் மருதுபாண்டியரால் புதுப்பிக்கப்பட்டது. தமிழகத்தின் பழைய நகரங்களிலேயே மிகத் தொன்மை வாய்ந்ததும் பெருமை நிறைந்ததும் காளையார்கோவில் தான்.

★

சோ. கருணுகரன், நாகர்கோவில்.

திராவிடமொழி நான்கையும் நீங்கள் கற்றிருக்கிறீர்களா?

இல்லை! ஓரளவு தமிழறிவேன். நான்கு மொழிகளையும் தெளிவாகக் கற்றவர் என்னுசிரியர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள்தான்.

★

ஜி. கே. வெங்கிடு, கோபி.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் பொன்னி இதழில் ஒரு கவிதையில் "மல்லிகையின் மணத்தில் உன் செவ்வி உணர்ந்தேன்!" என்ற வரி வரக்கண்டேன். "செவ்வி" என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

செம்மை, முழுமை என்ற பொருள்களில் அச்சொல் வழங்கப்பெறுகிறது.

★

கோவி. இளந்திரையன், சித்துக்காடு.

நப்நாடு நாளிதழில் "The Official Organ of D. P. F.' என்றுகுறிப்பிடப்பட்டிருக்கிறது. "D. P. F." என்பதற்கென்ன பொருள்?

Dravidian Progressive Federation.

★

சாம்பு. நடனமணி, சென்னை-12.

வழக்கில் வந்து விட்டதால், பசும்பால் என்று, பசுவின் பாலை அழைப்பது தவருகப்படவில்லை. ஆனுல் இலக்கணப்படி, பசுப்பால்தான் சரி என்று என் தமிழாசிரியர் வாதிக்கிருர். தங்கள் கருத்து என்ன?

ஆவின்பால் என்பது ஆப்பால் என்றழைக்கப்படவில்லை. ஆன்பால் என்றே அழைக்கப்படுகிறது. பசுவின்பால், பசும்பால் என அழைக்கப்படுவதில் மென்மைச்சுவை அமைகிறது. சில இடங்களில் இலக்கணத்தை விட வழக்கு உயர்வாகவே அமைந்துவிடுகிறது. இலக்கணத்தைப் பொறுத்தவரை தமிழாசிரியர் சொல்வது சரிதான்.

★

ச. கி. செல்வராசன், புதுவை.

சங்க இலக்கியங்களில் காணும் ஒரு தலைக்காதலுக்கும் இக்காலத்தில் நிகழும் ஒருதலைக் காதலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

சிலப்பதிகாரம்-தினத்தந்தி!

★

டி. ஆர். சுந்தரம், கோவை.

முதல் முழக்கம் செய்த வீரன் யார்? கட்டபொம்மனு? புலித்தேவனு?

கட்டபொம்மன்தான்! ஏனென்ருல் அந்த "நாடகம்" புலித்தேவன் நாடகத்திற்கு முன்னுலேயே வந்துவிட்டது!

★

ரா. சின்னசாமி, ஈரோடு.

பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம் ஒரு கம்யூனிஸ்டா?

ஆமாம் - அவர் பொது உடைமை!

★

முகவை மு. முகமதுயாசிம், ஆவடி.

எனக்கொரு தமிழ்ப் பெயர் வைக்கவேண்டும்?

வெள்ளிமலை!

★

இரா தம்பு, சென்னை-3.

குப்தாவின் "சகுந்தலை" வளர்கிருளா?

பாவம், குப்தா! சகுந்தலையின் ஆத்மா சாந்தியடைவதாகட்டும்.

தமிழ்வாணனைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

அரிசியுமல்ல; சோறுமல்ல; அரை வேக்காடு!

> **அடுத்த இதழில்...**
>
> காரைக்குடியில் நிகழ்ந்த குறள்விழாக் கவியரங்கில் அரங்கேறிய கவிதைகள் வெளிவருகின்றன.

சீ. ரஹீம், அறந்தாங்கி

எனக்குப் பல்வலி அதிகமாக இருக்கிறது. பற்களைப் பிடுங்கிக் கொள்ளலாமென்று நினைக்கிறேன். எங்கே செல்லலாம்?

எம். ஜி. ஆரைத் திட்டிவிட்டு மதுரைக்குப் போனுல், பொது வீதியிலேயே பற்களைப் பிடுங்கி விடுகிருர்களாம்!

★

ஆர். இராதாகிருட்டிணன், திருமறைக்காடு.

உங்களைக் கடுமையாகத் தாக்கும் பத்திரிகைகளுக்கு ஏன் பதில் சொல்லாமலிருக்கிறீர்கள்!

நான் பதில் சொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கு நான் பதில் சொல்வதில்லை. ஆனுல் "ம. பொ. சியைக் கிண்டல் செய்கிறீர்களே!" என்கலாம். நான் ம. பொ. சியைக் கிண்டல் செய்வதெல்லாம், ஒரு கொள்கைகூட இல்லாதகட்சியை வைத்துக்கொண்டு ஒரு தலைவர் இயங்குகிருரே என்பதால்தான். "கொஞ்சம்கூட வளராத அந்தத் தலைவரைப் பற்றி நீங்கள் ஏன் எழுதுகிறீர்கள்?" என்றே நண்பர்கள் கேட்கிருர்கள். "தென்ற"லில் நகைச்சுவை வேண்டுமென்பதற்காகத்தான் அண்மைக் காலங்களில் அவரைப் பற்றி எழுதத் தலைப்பட்டேன். கலையுலகிலே புகுந்துகொண்டுள்ள தகுதியற்ற ஒரு சிறு கூட்டம், பணம் கொடுத்துத் துண்டுப் பிரசுரங்கள்போல இரண்டொரு பத்திரிகைகளை நடத்த வைத்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இனி அதற்கும் வழியில்லை! அந்த "யூனிட்டு"களே ததிங்கிணத்தோம் போடுகின்றன.

★

> **நண்பர்கட்கு...!**
>
> கேள்விகள் ஆயிரக்கணக்கில் வந்துள்ளன; வாரந்தோறும் கூடிய அளவு பதிலளித்து வருகிறேன். நண்பர்கள் தமது கேள்விக்கு விடை வரவில்லையே என வருத்தப்பட வேண்டாம். நல்ல கேள்விகள் அத்தனைக்கும் வரிசையாகப் பதில் வரும்.
>
> ஆசிரியர்.

உருவகம் :

அழகும் அவலட்சணமும்

செல்லரித்துச் சிதைந்து போன ஏட்டுச் சுவடி ஒன்றில் இந்தக் கதை காணப்பட்டது.

அற்புதமான சித்திரங்கள் தீட்டும் ஓவியன் ஒருவனிடம், இரண்டு அருமையான ஓவியங்கள் தீட்டித் தரும்படி பேரரசர் கே டுக்கொண்டிருந்தார். அவை வெறும் கற்பனைகளாக இல்லாமல், உண்மை உருவங்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். அந்தச் சித்திரங்கள் இவைதாம் :

உலகிலேயே அழகான ஒருவனின் உருவம்.
உலகிலேயே அவலட்சணமான ஒருவனின் உருவம்.

முதலில் உலகிலேயே சிறந்த அழகனைத் தேடி அலைந்தான் ஓவியன். வெய்யில், மழை என்றுகூடப் பார்க்காமல், காடுமேடுகளைக் கவனிக்காமல், நாடு நாடாக ஊர் ஊராகச் சென்றான். அவன் பார்த்த யாரும் அவ்வளவு அழகர்களாகத் தெரியவில்லை.

தேடினான், தேடினான். தேடித் தேடி அலுத்தான்.

கடைசியில், அறிமுகமில்லாத புதிய நாடு ஒன்றின் மன்னனைக் கண்டான். பார்த்தவர்களை உடனே கவர்ந்து விடும் அதி அற்புத அழகனான அந்த மன்னனே உலகில் மிகச் சிறந்த அழகன் என்று முடிவு செய்தான் ஓவியன். அந்த மன்னனின் பெயரை விசாரித்தான். எழிலரசன் என்பது அவன் பெயர் எனத் தெரிந்துகொண்டான்.

தான் வந்த காரணத்தை அவன் எழிலரசனிடம் சொன்னான். அவனும் தனது உருவத்தை ஓவியமாகத் தீட்ட ஒப்புக்கொண்டான்.

அந்த ஓவியத்தைக் கண்ட பேரரசர் மகிழ்ச்சியடைந்தார். ஓவியனை வெகுவாகப் பாராட்டினார். அவரிடம்அந்தப் படத்தை ஒப்படைத்துவிட்ட ஓவியன், அடுத்த படமான உலகிலேயே அவலட்சணமானவனின் உருவத்தை எழுதப் பயணமானான்.

முதல் முறைபோலவே இப்பொழுதும் அவன் பல ஊர்களுக்குச் சென்றான். பல நாடுகளில் சுற்றினான். எங்கும் ஒருவனைவிட மற்றொருவன் அவலட்சணமாகத்தெரிந்ததால், முடிவுக்கு வரமுடியாமல் திணறினான். இந்த முயற்சியில் சில ஆண்டுகள் ஓடின.

முன்பின் பார்த்திராத புதிய நாடு ஒன்றில், ஒரு நாள், அருவருக்கத்தக்க நிலையில் சாக்கடையில் விழுந்து கிடந்த ஒருவனை ஓவியன் கண்டான். உடம்பின் எந்தப் பகுதியும் முழுமையாக இல்லாத - பெருநோய் பிடித்த - காணச் சகிக்கமுடியாதவனான அவனைப் பார்த்த ஓவியனுக்குக் குமட்டல் எடுத்தது. தான் தேடி வந்த இலட்சிய மனிதன் கிடைத்துவிட்டதாகத் திருப்தியடைந்தான்.

ஓவியன் அந்த அவலட்சணமானவனின் அருகில் சென்று, தான் அவனை ஓவியமாக எழுத விரும்புவதாகவும், அதற்காகத் தன் முன்னால் சிறிது நேரம் அசையாமல் அமர்ந்திருக்கும்படியும் கேட்டுக்கொண்டான். அதற்குக் கூலியாகப் பணம் தருவதாகவும் சொன்னான்.

'இல்லை முடியாது. முடியவே முடியாது' என்றான் அவன்.

'ஏன் ?' என்றான் ஓவியன்.

'இப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன் ஒருவன் என்னைப் படமாக எழுதினான். அதற்குப் பிறகுதான் எனது நிலைமை இப்படி ஆகிவிட்டது. இப்பொழுது என் படம் எழுதப்பட்டால் என் நிலை என்ன ஆகுமோ ?'

'நீ சொல்வது எனக்குப் புரியவில்லை !'

அவன் பதில் சொன்னான் :

'அப்பொழுது நான் ஒரு நாட்டின் மன்னன். ஒரு ஓவியன் உலகிலேயே அழகான ஒருவனின் படம் வேண்டும் என்பதற்காக என்னைப் பார்த்து வரைந்துகொண்டு போனான். அதன் பிறகுதான் என் நாடு பகைவர்களால் சூறையாடப்பட்டது. நான் தப்பி ஓடி வந்தேன். அந்தத் துயரத்தை மறக்க மதுவையும் மங்கைகளையும் நாடினேன். வேண்டியமட்டும் அனுபவித்தேன். அதன் விளைவுதான் இந்த நிலை !'

ஓவியன் அவசரமாகக் கேட்டான் :

'உன் பெயர் ?'

'எழிலரசன் !'

வந்த வேலையை மறந்து திகைத்து நின்றான் ஓவியன்.

— ப. புகழேந்தி

ஆடற்கலைக்கு அழகுதேடப் பிறந்தாள் !
ஆடுகின்றாள் மதுரைக் கலையரங்கில் !!
பொழிலாரும் பூங்காத் தோகை மயில்
தொழிலாளர் துயர்துடைக்க ஆடுகின்றாள் !!

மதுரை ஹார்வி எம்ப்ளாயீஸ் யூனியன் நிதிக்காக

மதுரை
தமுக்கம் கலையரங்கில்

9-8-'59 மாலை 6-30 மணிக்கு

கமலா லட்சுமணன்-
குமாரி ராதா

குழுவினரால்
நடனநிகழ்ச்சி நடைபெறும்.

கட்டணம் ரூ. 10, 5, 3, 2, 1

முதல் வகுப்பு ரிசர்வேஷன் உண்டு.

அடுத்த இதழ்....

நாவலர் சிறப்பிதழ்



★ தமிழ்ப்புலவர்கள் பலரின் அரிய கருத்தோவியங்கள் !
★ நாவலர் வாழ்க்கையில் வந்த நிகழ்ச்சிச் சித்திரங்கள் !
★ எண்பதாவதாண்டு விழாவின் எழில் காட்சிகள் !
★ நாவலர் தொண்டுரைக்கும் கண்ணதாசன் கவிதை !
★ பக்கங்கள் 16. விலை 25 காசு.
★ விற்பனையாளர்கள் முன்கூட்டித் தெரிவிக்கவும், தேவையான பிரதிகட்கு.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு